விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 26.04.2021 திங்கட்கிழமை | இதழ் : 146 | பக்கங்கள் : 16

## விசாரணை, கண்காணிப்பு குழுவில் இலங்கை பிரதிநிதிக்கு இடமில்லை

# ஐ.நா.வுக்கு பதிலளிப்பதற்கு தயாராகும் இலங்கை அரசு!

### ஒருதலைப்பட்சமான செயல்பாடு என அமைச்சர் கெஹலிய கடும் கண்டனம்



கொழும்பு, ஏப்ரல் 26

ஜெனிவாவை தளமாகக் கொண்ட சர்வதேச நிபுணர்களின் பிரத்யேக விசாரணை மற்றும் கண்காணிப்புக் குழுவில் இலங்கை பிரதிநிதிகளை இணைக்கப்போவதில்லை என மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. இந்நிலையில் பேரவையின் குறித்த முடிவுக்கு இலங்கை அரசாங்கம் முறையான பதிலை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

15



## போதை பொருள் கடத்திய நால்வர் குழு யாழில் கைது

யாழ்ப்பாணம், ஏப். 26

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஐஸ், ஹெரோயின், கஞ்சா போதைப் பொருள்களை கடத்தி வந்து விநியோகம் செய்த நால்வர் கொண்ட குழுவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

15

## மேலும் 650 பேருக்கு கொரோனா உறுதி!

கொழும்பு, ஏப்.26

நாட்டில் மேலும் 650 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து ஆயிரத்து 236ஆக அதிகரித்தது.

15

## நேற்று மேலும் 2 கொரோனா மரணங்கள்

கொழும்பு, ஏப்ரல் 25

நேற்றைய தினம் இரண்டு கொரோனா மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் எண்ணிக்கை இதன் மூலம் 644 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## திருகோணமலை கல்வி வலய பாடசாலைகளுக்கு விடுமுறை

### கிழக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை

திருமலை, ஏப் 26

திருகோணமலை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் உடன் அமுலாகும் வகையில் விடுமுறை வழங்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

திருகோணமலை கல்வி வலயத்திற்கு உட்

15

## தனிமைப்படுத்தலில் இருந்தவர் கிளிநொச்சியில் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஏப். 26

கிளிநொச்சியில் தனிமைப் படுத்தலில் இருந்த 47 வயது பெண் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பெண்ணின் மரணம் தொடர்பில் பரிசோதனைகளுக்காக மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டன. எனினும் அந்தப் பெண்ணுக்கு தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓமானிலிருந்து நாடு திரும்பிய நிலையில் குறித்த பெண் இரணை

15

## யாழ்ப்பாணத்தில் ஏழு பேர் உட்பட வடக்கில் 9 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்ப்பாணத்தில் மேலும் ஏழு பேருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்று ஞாயிற்றுக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 408 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 9 பேருக்கு தொற்று கண்ட

15

### இரண்டு வார காலத்துக்கு

## அரச, தனியார் விழாக்களை நிறுத்துவதற்கு அரசு முடிவு

கொழும்பு, ஏப்.26

நேற்று முதல் எதிர்வரும் இரண்டு வாரகாலப் பகுதியில் நடைபெற ஏற்பாடாகியிருந்த அனைத்து அரச விழாக்களையும் நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதேபோன்று எதிர்வரும் இரண்டு வாரகாலப் பகுதியில் திட்டமிடப்பட்டிருந்த தனியார்துறையின் அனைத்து விழாக்கள்,

15

## சீனா புகுந்த நாடு என்றுமே உருப்படாது என்பது உண்மை

### இராதாகிருஷ்ணன் கடும் காட்டம்



பதுளை, ஏப்.26

மலையக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் செய்த அநீதிக்கு இன்று இந்த நாடு துண்டாடப்பட்டு பகுதி பகுதியாக விற்பனை செய்யப்படுகின்றது. இது ஒரு துரதிர்ஷ்டமான நிலைமை. சீனா புகுந்த நாடும் ஆமை

15

## வட்டுவாகலில் வெடிபொருள் வெடித்து இளைஞர் பலி மற்றொருவர் படுகாயம்



முல்லைத்தீவு, ஏப். 26

வட்டுவாகல் பாலம் அருகே கடற்படை முகாமுக்கு முன்னுள்ள காணியில் வெடிபொருள் வெடித்ததில் இளைஞர் ஒருவர் பலியானார். மற்றோர் இளைஞர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு செல்வபுரத்தை சேர்ந்த சந்திரகுமார் நிஷாந்த் (வயது 19) என்பவரே உயிரிழந்தார். அவருடன் சென்றவரான செல்வகுமார்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா புகுந்த நாடு...

புகுந்த வீடும் என்றுமே உருப்படாது என்பதுதான் உண்மை என மலையக மக்கள் முன்னணியின் தலைவர், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் மறுசீரமைப்பு கூட்டம் நேற்று பதுளை ரிவசைட் விருந்தகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இன்று இலங்கை என்ற அழகிய தீவு ஒவ்வொரு நாட்டுக்கும் துண்டாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்கு காரணம் அன்று பெரும்பான்மை சமூகம் மலையக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்த நாட்டில் இழைக்கப்பட்ட அநீதியாகும்.

இந்த நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தால் பொது மக்கள் பலர் கொன்று குவிக்கப்பட்டனர். அதேபோன்று 83 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தின் பொழுது மலையக மக்கள் அனைத்து இடங்களிலும் பாதிக்கப்பட்டனர்.

அன்று இந்த விடயங்களை நினைத்தும் பார்த்தும் ஒரு சில பெரும்பான்மைச் சமூகத்தினர் சந்தோசப்பட்டார்கள். இந்த நாடு தமிழர்களுக்கு சொந்தமில்லை இது தனியே பெரும்பான்மை மக்களுக்கான நாடு என்று பிரசாரம் செய்தார்கள்.

ஆனால், இன்று இலங்கையின் நிலை என்ன? பல நாடுகள் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே விலைபேசி வாங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் பெரும்பான்மைச் சமூகம் இந்த நாட்டில் இருக்கின்ற அனைவரையும் இந்த நாட்டின் பிரஜைகளாக நினைக்கவில்லை.

தனியே இந்த நாடு பெரும்பான்மை மக்களுக்குச் சொந்தமான நாடு என கூறுகின்றார்கள். இந்த நிலைமை தொடருமானால் இன்னும் ஒரு சில வருடங்களில் இலங்கையில் பல தீவுகள் உருவாகலாம். அதன் முதலாவது தீவாக தற்பொழுது கொழும்பில் அமைக்கப்பட்டு வருகின்ற போர்ட்சிற்றி என்று சொல்லப்படுகின்ற துறைமுக நகர் சீனாவின் தீவாக மாறிவிடும்.

இப்படி பல தீவுகள் இங்கே உருவாகி இலங்கை என்ற ஒரு நாடு இல்லாமல் போய்விடும். எனவே இந்த நாட்டை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் நாம் அனைவரும் இலங்கையர் என்ற வகையில் ஒன்றுபட வேண்டும்.

அப்படி ஒன்றுபடாவிட்டால் ஆண்டவன் கூட இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது. எனவே இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் தமிழர்கள் முஸ்லிம்கள் ஏனையவர்களையும் தங்களுடைய குடும்பத்தில் ஒருவராக கருத வேண்டும். அப்படி செய்தால் நிச்சயமாக இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும். இல்லாவிட்டால் சீனா புகுந்த நாடும் ஆமை புகுந்த வீடும் என்றுமே உருப்படாது என்பதுதான் உண்மை. எனவே, இதனை புரிந்து இந்த அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டும்-என்றார். (எ)

## ஐ.நா.வுக்கு...

கடந்த மாதம் ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அம்சங்களை விரைவாக அமுல்படுத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சமீபத்தில் அறிவித்திருந்தது. அதன்படி போரின் போது மற்றும் அதற்குப் பிறகான மனித உரிமைகள் மீறல் தொடர்பாக தகவல் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் பகுப்பாய்வு ஆகியவை இதில் அடங்கும்.

அதன்படி, இலங்கையை கண்காணிக்க ஜெனிவாவை தளமாகக் கொண்ட சர்வதேச நிபுணர்களின் குழுவை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் திரட்டி வருகின்றது. இந்நிலையில் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இந்த விசாரணைக் குழுவில் இலங்கையின் பிரதிநிதியைத் தவிர்ப்பதற்கான அவர்களின் முடிவு குறித்து அரசாங்கம் விரைவில் முறையான பதிலை அளிக்கும் என கூறியுள்ளார். இருந்தபோதிலும், இது யோசனையாக மட்டுமே இப்போது முன்வைக்கப்பட்டிருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் நிதிப்பற்றாக்குறை செயல்முறைகளை மேற்கோள் காட்டி சர்வதேச நிபுணர்கள் குழு பெரும்பாலும் ஜெனிவாவில் இருந்தே செயற்படும் என மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கூறியிருந்தது. இவ்வாறு பெயரிடப்பட்டவர்களில் பலர் இலங்கையின் கலாச்சாரம் மற்றும் பின்னணிக்கு அந்நியர்கள் என்பதால் அத்தரப்பினரால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின்படி செயற்படுவதன் ஒருதலைப்பட்ச நடவடிக்கை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டினார்.

## யாழ்ப்பாணத்தில்...

றியப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர் இருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் கேகாலை, குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை, யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

தெல்லிப்பழை வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்கள் இருவரும் கொரோனா தொற்றாளர்களுடன் நேரடித்தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

இதேவேளை, பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-03)

## வட்டுவாகலில்...

சாந்தரூபன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

இருவரும் நுங்கு வெட்டுவதற்காக வட்டுவாகல் பகுதிக்கு சென்றிருந்தனர். கடற்படை காணியின் முன்பாக அங்கு நின்றிருந்தபோது வெடிபொருள் வெடித்துள்ளது.

வெடிச் சத்தம் கேட்டு அங்கு விரைந்த கடற்படையினர் இருவரையும் மீட்டு உடனடியாக முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். அங்கு ஒருவர் மரணமானார். மற்றவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இருவரும் வயிறு மற்றும் அதனை அண்மித்த பாகங்களில் கடும் காயங்களுக்கு உள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் நடத்தி வருகின்றனர். கைக்குண்டு ஒன்றே வெடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. எனினும் இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## அரச, தனியார்...

கூட்டங்கள், நிகழ்வுகள் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களின் கீழ் நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# கொரோனாவை கட்டுப்படுத்தும் பொறுப்பிலிருந்து தவறிவிட்டது

## அரசு மீது சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப் 26

கொரோனாவை கட்டுப்படுத்தும் பொறுப் பிலிருந்து அரசாங்கம் தற்போது விலகி விட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொதுமக்கள் தங்களின் ஆரோக்கியத்தை தாங்களாகவே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கத்தின் செயற்பாட்டின் காரணமாகவே நாட்டில் கொரோனா தொற்று மீண்டும் பரவ ஏதுவாக அமைந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொரோனா தடுப்பூசி செலுத்துவது குறித்து பொதுமக்கள் எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள் அரசாங்கம் இதையாவது வெற்றி கரமாகச் செய்யவேண்டும். செய்யும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஆனால், இதைத் தவறினால் கொரோனாவை தடுக்கும் விடயத்தில் முழுமையாக அரசு தோல்வியடைந்து விட்டது என நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என சரத் பொன்சேகா கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். கூட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிக் கூட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுவருகின்ற சூழலில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் உட்பட்ட வெளி மாவட்டங்களிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் உறுப்பினர்களும் பங்கு கொள்வதால் கொரோனா அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாக சுகாதார தரப்பினர் அறிவுறுத்தியதன் அடிப்படையிலேயே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. (ஐ)

# தந்தை செல்வா நினைவுதினம் 50 பேர் மட்டுமே பங்கேற்கலாம்!

யாழ்ப்பாணம், ஏப். 26

தந்தை செல்வா நினைவுதினத்தை 50 பேருடன் மட்டும் நடத்துவதற்கு யாழ். மாவட்ட சுகாதாரப் பிரிவு அனுமதியளித்துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகர் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 44ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும். இதையொட்டி யாழ்ப்பாணத்தில் சிறப்பு நிகழ்வு இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்போதுள்ள கொரோனா தொற்று பரவலையடுத்து நிகழ்வை சுகாதார விதிகளுடன் இறுக்கமாக நடத்தவும், 50 பேர் மட்டுமே நிகழ்வில் பங்கேற்கவும் சுகாதாரப் பிரிவினர் அனுமதியளித்துள்ளனர். (ஐ)

# புத்தளத்தில் 22 பேர் கைது

புத்தளம், ஏப்.26

கொரோனா தடுப்பு சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் புத்தளம் நகரில் மட்டும் நேற்று ஞாயிற்றுக்கிழமை 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

முகக்கவசமின்றி புத்தளம் நகரில் இவ்வாறு சுற்றித்திரிந்தவர்களும், வர்த்தக நிலையங்களுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வருகை தந்தவர்களுமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் பணிக்கப்பட்டதாகவும் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## திருகோணமலை...

பட்ட பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## போதை பொருள்...

இவ்வாறு கைதானவர்கள் 24, 26, 34, 38 வயதுகளை உடையவர்கள். இருவர் குருநகரை சேர்ந்தவர்கள் என்பதுடன் மற்றையவர்கள் நீர்வேலி, கோப்பாய் பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது.

கைதானவர்களிடம் இருந்து 7 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 10 கிராம் ஹெரோயின் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், இவற்றை விநியோகிக்கப் பயன்படுத்தப்பட்ட கூலர் ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் பிரதான பரிசோதகர் நிகால் பிரான்ஸின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான அணி இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது. (ஐ-3)

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

## மேலும் 650...

இதேவேளை, மேலும் 156 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பிய நிலையில், தொற்றிலிருந்து மீண்டோரின் எண்ணிக்கை 94 ஆயிரத்து 311ஆகப் பதிவாகியது.

அத்துடன், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 644 பேர் மரணித்ததுடன் இன்னும் ஆறாயிரத்து 283 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (எ)

## தனிமைப்படுத்தலில்...

மடு விமானப்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வந்துள்ளார். இந்த நிலையில் குறித்த பெண்ணுக்கு ஏற்பட்ட திடீர் நோய் காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்தார். குறித்த பெண் பாணந்துறை பகுதியைச் சேர்ந்த எம். இசற். எம். எச். பாத்துமா சியானா (வயது 47) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கொரோனாவை காட்டி தடுக்க முயற்சி

## திட்டமிட்டபடி ஜே.வி.பியின் மே தினம் இடம்பெறும் என்கிறார் சந்திரசேகரம்

யாழ்ப்பாணம்,ஏப்.26



**முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை கோட்டாபய அரசாங்கம் தடுத்தது எனவும், திட்டமிட்டபடி மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) மே தினக் கூட்டம் இடம்பெறும் என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.**

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

இம்முறை மே தினத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். எனினும், இந்த அரசாங்கமானது எமது மே தின நிகழ்வுகளைத் தடைசெய்வதற்கு பல்வேறு விதத்திலும் முயன்று வருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியினர் ஆகிய நாங்கள் எந்தத் தடை வந்தாலும் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் எமது மே தினத்தை நினைவு கூறுவோம் என உறுதி கொண்டுள்ளோம். மே மாதம் என்பது ஒரு விஷேட ஒரு மாதமாகும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மற்றும் மேதின நிகழ்வு இடம்பெறும் மாதமாகும்.

முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்கான இறந்த உயிர்களை மக்கள் நினைவு கூரும் நாள், எனினும் இந்த அரசாங்கமானது தற்போது கொரோனா என்ற ஒரு மாயையை உருவாக்கி இந்த இரண்டு மே தினம் மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுப்பதற்காகவே இந்த கொரோனா என்ற குழப்பத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்கிறது.

அதனால், மக்கள் விடுதலை முன்னணி என்ற வகையிலே விஷேடமாக முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்கள் என்பவர்கள் வேறு நாட்டு மக்கள் இல்லை. எதிரி நாட்டு பிள்ளைகள் இல்லை. எங்களது உறவுகள், எங்களது சகோதரர்கள். அதனால் அந்தச் சகோதரர்களை நினைவு கூருவதற்கு அந்த மக்களுக்கு உரிமை இருக்கின்றது. அந்த உரிமையை அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. அதனால், இதற்கு எங்களுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்கள் எதற்காகப் போராடினார்கள் என்பதல்ல பிரச்னை. எதற்காகப் போராடினாலும் கூட அவர்கள் எமதுநாட்டு மக்கள். வேறும் யாரும் இல்லை. மக்கள் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு யாரும் தடுக்க முடியாது. எனவே மக்களின் உரிமையை இந்த அரசாங்கம் நிலை நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

(எ-03)

## கொரோனா தொற்றாளர்கள் அடையாளம்

# தம்புள்ளை பொருளாதார நிலையம் தற்காலிகமாக நேற்று மூடப்பட்டது

கொழும்பு,ஏப்.26

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையால் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தை மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தம்புள்ளை முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் 72 மணித்தியாலங்களுக்கு (மூன்று நாள்கள்) இந்த பொருளாதார மத்திய நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் சிலருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்ட நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள், மற்றும் சேவையாளர்கள் உள்ளிட்டவர்களே இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள நிலை யில் அவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# ரயிலில் மோதி வயோதிபர் பலி!

திருகோணமலை, ஏப். 26

ரயில் தண்டவாளத்தில் நடந்து சென்ற வயோதிபர் ரயில் மோதி உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் திருகோணமலை பாலையூற்றை சேர்ந்த டேவிட் பிரபாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். உயிரிழந்தவரின் சடலம் பிரேத மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## இப்படியும் நடக்கிறது...!

இந்தப் பத்தியை எழுத ஆரம்பிக்கும்போது எனது தொலைபேசிக்கு ஒரு குறுந்தகவல் வந்தது.

"மறைந்த தமிழர் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மகன் டாக்டர் பகீதரன் தனது முகநூலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றி ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார் பார்த்தீர்களா?", என்று கேட்டது அந்த குறுந்தகவல்.

உடனே பகீதரனின் முகநூல் பக்கத்துக்கு சென்று பார்த்தபோது, இந்த ஊர்க் குருவியின் மனதில் குடைந்து கொண்டிருந்த சங்கதி ஒன்றைப் பற்றித்தான் அவர் எழுதியிருந்தார்.

இன்றைய இந்தப் பத்தியில் அவரது குறிப்பை அப்படியே எதுவித மாற்றமும் இல்லாமல் தரலாம் என்று விருப்பம் வந்தது. அதனை அப்படியே கீழே தருக்கின்றோம்.

என்ன நடக்கிறது...?

தமிழர் விடுதலை கூட்டணி என்ற கட்சி எழுபதுகளின் ஆரம்பத்தில் தமிழர்களின் ஒற்றுமையை உணர்த்தி பல கட்சிகளை இணைத்து, பிரதானமாக நீண்ட காலமாக எதிரெதிர் அணியில் இயங்கிய இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியையும் இலங்கை தமிழ் அரசு கட்சியையும் இணைத்து உருவாக்கப்பட்ட ஓர் இயக்கமாகும். இது ஆரம்பத்தில் தமிழர் கூட்டணி என அழைக்கப்பட்டாலும் பின்னர் தமிழர் விடுதலை கூட்டணி என உருவாக்கம் பெற்று தமிழரின் உரிமை போராட்டத்தின் முன்னணி இயக்கமாக விளங்கியது. 1975இல் பண்ணாகத்தில் நடைபெற்ற அதன் முதலாவது மாநாட்டில் இதன் தலைவர்களாக தந்தை செல்வாவும், தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலமும் மலையக தலைவர் தொண்டமானும் தெரிவானார்கள். இதன் இணைக் காரியதரசிகளாக அ.அமிர்தலிங்கமும், மு.சிவ சிதம்பரமும் தெரிவானார்கள். இந்த மாநாட்டிலேயே வட்டுக்கோட்டை தீர்மானம் எனும் தமிழர்களின் ஏகோபித்த அபிலாஷையான தனி நாட்டு தீர்மானமும் இயற்றப்பட்டது. கால ஓட்டத்தில் தந்தை செல்வாவும் தலைவர் ஜீ. ஜீயும் மறைய இதன் தலைவராக மு. சிவசிதம்பரமும் செயலாளர் நாயகமாக அ. அமிர்தலிங்கமும் பதவியேற்று செயல்பட்டனர். 1977இல் நடைபெற்ற தேர்தலை, வட்டுக்கோட்டை தீர்மானத்தை, தமிழரின் சர்வஜன வக்கெடுப்பின் நிகழ்வாக முன்னெடுத்து தமிழ் மக்களின் தீர்மானம் இதுவே என உறுதிப்படுத்தினர். இலங்கை பாராளுமன்றத்தில் முதலாவது தடவையாக ஒரு தமிழ்கட்சி பிரதான எதிர்க்கட்சியாகி முதலாவது தமிழ் எதிர்கட்சி தலைவர் தெரிவானார். 1977முதல் இயற்கை எய்தும் வரை தலைவர் சிவசிதம்பரம் அந்த இயக்கத்தின் தலைவராக திகழ்ந்தார். 1977 முதல் விடுதலை புலிகளால் 1989இல் படுகொலை செய்யப்படும் வரை அமிர்தலிங்கமும் அதன் பின்னரான 1989 முதல் 2000ஆம் ஆண்டு மனித தற்கொலை குண்டினால் மரணிக்கும் வரை கலாநிதி நீலன் திருச்செல்வம் செயலாளர் நாயகமாக இயங்கினர். அதனை தொடர்ந்து அந்த பதவியை தலைவர் ஆனந்தசங்கரி பொறுப்பேற்று பல நெருக்கடியான காலங்களிலிருந்து இன்று வரை அந்த பதவியில், செயலாளர் நாயகமாக இருக்கிறார். 2002இல் தமிழீழ விடுதலை புலிகள் ஜனநாயக பாதையிலும் இயங்க முற்பட்டு ஏற்கனவே தனிப் பெரும் ஜனநாயக கட்சியாக இயங்கிய தமிழர் விடுதலை கூட்டணியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முறபட்டனர், ஒரு விதத்தில் வெற்றியும் கண்டனர். தமிழர் விடுதலை கூட்டணியில் அன்று செயல்பட்ட சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் விடுதலை புலிகளின் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆடிய போது, அந்த அரசியல் இயக்கத்தின் ஜனநாயகத்தை பாதுகாக்க ஆனந்தசங்கரி நீதிமன்றத்தின் உதவியை நாடி கட்சியை தன் பிடியினுள் கொண்டு வந்தார். இதனால், அவரின் உயிருக்குக்கூட ஆபத்துகள் பல ஏற்பட்டன. எதற்கும் அஞ்சாமல் செயல்பட்டார். தமிழ் அரசு கட்சி, தூசி தட்டப்பட்டு மீண்டும் ஓர் இயக்கமாக செயல்பட ஆரம்பித்தது. இதன் புகழ்பெற்ற வீட்டு சின்னம் விடுதலை புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய முன்னணியின் தேர்தல் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது. 2004 தேர்தலின் பின்னர் தமிழர் விடுதலை கூட்டணி ஓரங்கட்டப்பட்டது. இந்த நிலை தொடர்ந்து அண்மையில் நடந்த, 2020 இறுதி தேர்தல் வரை எந்தவித ஆசனமும் கிடைக்காமல் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சியாகவே தமிழர் விடுதலை கூட்டணியும் தலைவர் ஆனந்தசங்கரியும் இருக்கிறார்கள். இதற்கு பல காரணங்கள் இருந்தாலும்கூட தமிழர் விடுதலை கூட்டணி தமிழ் தேசிய முன்னணியை விட்டு வெளியேறியதுவும் மக்களுடன் நேரடி தொடர்புகளை மேற்கொள்ளாமையும், எந்தவித நடவடிக்கைகளிலும் அண்மையில் ஈடுபடாமல் இருப்பதுவுமே பிரதான காரணங்களாக கருதவேண்டியுள்ளது.

இன்று இந்த பாரம்பரிய இயக்கத்தின், 25 வருட விறுவிறுப்பான கட்சியின் நிலைமைதான் என்ன? இதன் எதிர்காலம்தான் என்ன என்ற கேள்வி மனதில் எழுகிறது. அண்மையில் சில சம்பவங்கள் திரைமறைவில் நிகழ்வதாக வதந்திகள் உலாவுகின்றன. உண்மைகள் தெரியாத நிலையில் அண்மையில் நடந்த ஒரு பிரத்தியேக கூட்டம் சில பல கேள்விகளை எழுப்புகிறது. இந்தக் கூட்டம் யாழ்ப்பாணத்திலிருக்கும் சர்வோதய மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு பல முக்கியஸ்தர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். பிரதான புலனாய்வு பிரிவினரும் மறைவாக பங்கு பற்றினர். இதில் பேசிய தற்போதைய தமிழ் ஊடக ஜம்பவான், டான் தொலைக்காட்சியின் தலைவர் குகநாதன் பேசியபோது தமிழர் விடுதலை கூட்டணியின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு பற்றி கேள்வி எழுப்பினார். தற்போதைய பிரதான கேள்வி தமிழர் விடுதலை கூட்டணியின் தற்போதைய வருங்கால அரசியல் நிலைப்பாடு பற்றியதாகும். இன்று பல கூறாக பிரிந்து இருக்கும் தமிழ் தேசிய கட்சிகளுடன் ஒரு சமாந்தர நிலைப்பாட்டுடன் இது பயணிக்க போகிறதா அல்லது இலங்கையின் ஒரு தேசிய கட்சியாக தன்னை அடையாளம் காட்டி புது வடிவம் எடுக்கப் போகிறதா என்பதே கேள்வி. இதையே குகநாதன் உட்பட அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் தமது பேச்சில் குறிப்பிட்டனர். இன்றைய நிலையில் நடக்கும் எந்தவித தமிழ்த் தேசிய போராட்டங்களிலும் தமிழர் விடுதலை கூட்டணி பங்குபற்றவில்லை, தனது இருப்பை உறுதிப்படுத்தவில்லை. பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச்சி ஊர்வலத்திலாகட்டும் ஏனைய நிகழ்வுகளிலாகட்டும், ஏன் இன்றைய ஜெனிவா விவரங்களிலாகட்டும் எந்தவிடத்திலும் ஒரு சிறு பங்களிப்பைக்கூட காண முடியவில்லை. இந்த நிலை கவலையளிக்கிறது, அந்த பாரம்பரிய கட்சியின் வருங்காலம் என்ன என்ற கேள்வியை எழும்புகிறது. தலைவர் ஆனந்தசங்கரி அடுத்து என்ன செய்யப் போகிறார், இந்த கட்சியின் வருங்கால நிலைப்பாடு எப்படி இருக்கப்போகிறது என்பது ஒரு கேள்வியாக, பதில் தெரியாத, ஊகிக்க முடியாத கேள்வியாக இருக்கிறது. தெரிந்தால் சொல்லுங்கள்?

பகீதரனின் கேள்வி அதுதான். ஆக, தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று தமிழ் தேசியக் கட்சிகள் பட்டியலிலும் இல்லை. எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அதனுடன் இணைந்து இயங்குவதன்மூலமே தமிழ் மக்களை வாழ வைக்கலாம் என்ற அரசியல் சித்தாந்தத்துடன் உள்ள அணியிலும் இல்லை. அப்போ எங்கே நிற்கிறது என்ற கேள்வி நியாயமானதே!

**- ஊர்க்குருவி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.04.2021 திங்கட்கிழமை
சார்வரி, சித்திரை 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இலங்கை மீதான புதிய விசாரணை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானத்திற்கு அமைவாக, ஐ.நா, மனித உரிமைகள் பேரவை புதிய விசாரணைகளுக்கான பணிகளை ஆரம்பித்திருக்கின்றது. விசாரணைக்கான நிபுணர் குழுவில் இலங்கையர்கள் எவரையும் இணைத்துக்கொள்ளப்போவதில்லையென்றும் பேரவை அறிவித்திருக்கின்றது. இதன்மூலம், குறித்த விசாரணை முற்றிலும் சுயாதீனமான சர்வதேச நிபுணர்களாலேயே மேற்கொள்ளப்படவுள்ளது.

ராஜபக்ஷக்களின் அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்க மறுத்துவரும் சூழலிலேயே, மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் இவ்வாறானதொரு முடிவை எடுத்திருக்கின்றார். தற்போதைய சூழலில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளையோ அல்லது ஏனைய இலங்கையர்கள் எவரையுமோ மேற்படி விசாரணையில் இணைத்துக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது. ராஜபக்ஷக்களின் அரசாங்கம் புதிய பிரேரணையை முற்றிலுமாக நிராகரித்திருக்கின்ற நிலையில், இலங்கையை சேர்ந்தவர்களை இணைப்பதன் மூலம் விசாரணையின் சுயாதீனத்தன்மை பாதிக்கப்படலாம் என்னுமடிப்படையிலேயே இவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களால் இலங்கையை கட்டுப்படுத்த முடியாது – எனவே, இந்தப் பிரேரணைகளால் பயனில்லை – எனவே, இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்தை, மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியிலெடுக்கவேண்டும் – என, சில தமிழ் குழுக்கள் வலியுறுத்திவருகின்றன. இதில் ஒரு பகுதி உண்மையுண்டு. அதாவது, மனித உரிமைகள் பேரவையின் தீர்மனங்களினால் – அதேபோன்று, தற்போது மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைகளால் இலங்கையை கட்டுப்படுத்த முடியாதுதான். இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவம் பெற்ற ஓர் இறைமையுள்ள நாடு. இறைமையுள்ள ஒரு நாட்டிற்குள் ஐக்கிய நாடுகள் சபை தலையீடு செய்வதற்கு ஓர் எல்லையுண்டு. இதனையே தங்களுக்கு சாதகமான விடயமென்று ராஜபக்ஷக்கள் கருதுகின்றனர் போலும். ஆனால், இதில் ஒரு சிக்கலான பக்கமுண்டு. பலம்பொருந்திய மேற்குலக நாடுகள் சில தீர்மானங்களை எடுப்பதற்கான ஆதாரமாக, குறித்த விசாரணை அறிக்கையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

குறித்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில், மேற்குலக நாடுகள் இலங்கையின்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடியும். சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இலங்கையின் இறுதிப் போரில் தீர்மானங்களை மேற்கொண்டவர்கள், முக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் – என அனைவர்மீதும், பிரத்தியேகமான சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும். அவர்கள் மீதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மீதும் பயணத் தடையை ஏற்படுத்த முடியும். வெளிநாடுகளிலுள்ள அவர்களின் சொத்துக்களை முடக்க முடியும். அவர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களை சர்வதேச எல்லைகளில் வைத்து, கைதுசெய்ய முடியும். அவ்வாறான நடவடிக்கைகள் சிலவற்றை மேற்குலக நாடுகள் கடந்த காலத்தில் மேற்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, அமெரிக்கா நினைத்தால் இலங்கையின் குரல்வளையை இறுக்க முடியும்.

இதிலிருந்து இலங்கை தப்புவது முடியாத காரியமாகலாம். இது, குறிப்பிட்ட நபர்களை கைதுசெய்வதுடன் மட்டும் தொடர்பானதல்ல. மாறாக, முழு இலங்கையுமே ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் வீழ நேரிடும். சர்வதேச சமூகத்திலிருந்து அந்நியப்பட நேரிடும். தற்போதுள்ள சூழலில், மேற்குலகத்தின் கொள்கை முடிவுகள் – குறிப்பாக, அமெரிக்காவின் கொள்கை முடிவுகள், மனித உரிமைகளின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. பைடன் நிர்வாகம் இந்த விடயத்தில் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். எனவே, பேரவையின் விசாரணை அறிக்கையானது, சிலர் எண்ணுவதுபோன்று, சாதாரணமாக முடிந்துவிடப்போகும் ஒன்றல்ல.

# சீன ஈழம் – தமிழ் ஈழம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

*இரு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன சுவாரஸ்யமான கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். அது, தற்போது கொழும்பில் சீனாவினால் நிர்மாணிக்கப்பட்டு இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்ற கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் பற்றியதாகும்.*

*சீனாவின் பொருளாதார பலத்தை பின்னணியாகக்கொண்ட 'காலனித்துவ' விஸ்தரிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் விளங்குகின்றது. கடலுக்கு மத்தியில், தலைநகர் கொழும்பில் அமைந்துள்ள சீனாவின் இப்பாரிய நிர்மாணம், **269** ஹெக்ரெயர்கள் விஸ்தீரணம் கொண்டது. இதில் **91** ஏக்கர்கள் பொதுமக்களின் வதிவிட பாவனைக்கு ஒதுக்கப்படும்.*

***62** ஏக்கர்கள் வர்த்தக நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்படும். **116** ஏக்கர்கள் நகர அபிவிருந்தி அதிகார சபை மற்றும் சீன பொறியியல் நிறுவனம் ஆகியவற்றுக்கு வழங்கப்படும்.*

**கடலின் மத்தியில் பொறியியல் அற்புதம்**

*கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் சீனாவின் நிர்மாணமாக இருக்கின்ற போதிலும், தென்னாசியாவில் கடலுக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்ட ஒரு பாரிய பொறியியல் அற்புதமாகவே இந்த நிர்மாணத்தை கருத முடியும். ஏனெனில், காலிமுகத்திடல் கடற்கரைக்கப்பால், **269** ஹெக்ரெயர் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள இப்பாரிய நிர்மாணம், வெறுமனே கட்டிடங்களை மட்டும் உள்ளடக்கப்போவதில்லை. நெடிதுயர்ந்த விருட்சங்கள் மற்றும் விரிந்து விசாலமான பல்வேறு வகையிலான மரங்கள், நன்னீர் ஓடைகள் , குளங்கள் என்பவற்றையும் இந்த துறைமுக நகர அபிவிருத்தி திட்டம் தன்னகத்தே கொண்டிருக்கும். ஏற்கனவே வேரோடு பிடுங்கிக் கொண்டுவரப்பட்டு, பரீட்சார்த்தமாக கடலுக்கு மத்தியில் உருப்பெறும் இப்புதிய நிலப்பரப்பில் நாட்டப்பட்டுள்ள மரங்கள் செழிப்போடு வளர்ந்திருப்பதை காணமுடியும்.*

**இலங்கை தரையமைப்பில் மாற்றம்**

*இதைவிட, இப்புதிய கடலின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணம் முழுமையாக பூர்த்தியடையும் பட்சத்தில், அது வேறோர் அழகிய நிலப்பரப்பாகவே இலங்கையின் தரையமைப்பில் புதிய மாற்றத்தையும் ஏற்படுத்தியதாக அமைந்திருக்கும். இருந்தபோதிலும், இப்புதிய நிர்மாணத்தின் அரசியல் பின்னணியே தற்போது எதிர்க்கட்சியினரால் சர்ச்சைக்குரியதாக சூடுபிடித்துள்ள தருணத்தில், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன அப்பாரிய சீன நிர்மாணத்தை 'சீன ஈழம்'என்று வர்ணித்துள்ளார்.*

*வடக்கு-கிழக்கு தமிழர் தொடர்பாக கடும்போக்கான போக்கைக்கொண்டுள்ள தென்னிலங்கை அரசியலில் ஒரு நடுநிலையான போக்குடன் சிந்திக்கத் தெரிந்த அரசியல்வாதியாகவும், தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தனது ஆதரவை எப்போதும் வெளிப்படுத்தி வருபவராகவும் ராஜித சேனாரத்ன விளங்குகின்றார்.*

*எனவே, அவர் சீனாவின் நிர்மாணமான கொழும்பு துறைமுக நகரத்தைப்பற்றி விமர்சிக்கையில், அப்பெரும் நிர்மாணத்தை 'சீன ஈழம்' என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அவர் மேலும் அச் சீன நிர்மாணம்பற்றி குறப்பிடுகையில், எங்கேயோ இருக்கின்ற சீனாவுக்கு இலங்கையில் பாரிய புதிய நிலப்பகுதியை உருவாக்க அனுமதி கொடுக்க முடியுமென்றால், இலங்கையின் வடக்கு-கிழக்கில் பூர்வீக குடிமக்களாக இருக்கின்ற தமிழ் மக்களுக்கு அவர்கள் கோருகின்ற தமிழ் ஈழத்தை ஏன் வழங்க முடியாது? என்ற கேள்வியை ராஜித சேனாரத்ன எழுப்பியிருந்தார். கொழும்பு துறைமுக நகரைப் பொறுத்தவரை புதியதொரு மாபெரும் நிர்மாணமாக சீனாவுக்கு ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் அதனைத் தாரைவார்த்துக் கொடுத்துள்ளனர்.*

**தென்னாசியாவில் சீன வல்லாதிக்கம்**


*தென்னாசியாவில் சீனாவின் சர்வதேச வல்லாதிக்கத்துக்கு துணைபோகும் விதத்திலேயே புதிய கொழும்பு துறைமுக நகர அமைவிடம் கடலின் மத்தியில் அமையப்பெற்றுள்ளது. மறுபுறத்தே, வடக்கு-கிழக்கு தமிழர்கள் வரலாற்று ரீதியாக காண்படுகின்ற தமது வாழ்விடத்துக்கு உரிமை கோரிய நிலையில், இந்த நியாயமான கோரிக்கைக்காக இலங்கை சுதந்திரமடைந்த கடந்த 70 வருட காலத்தில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் நிறையவே விலை கொடுத்தவர்களாகவே இருக்கின்றனர்.*

**40 வருட கால கொடிய யுத்தம்**

*கடந்த 40 வருடகாலத்தில் மிக மோசமான போராட்டத்தைக்கூட தமது நிலபுலங்களுடன்கூடிய தனித்துவத்தை நிலைநாட்ட எண்ணிலடங்காத உயிர்ப்பலிகளுடன் அவர்கள் முன்னனெடுத்திருந்தனர். இந்நிலையில், டாக்டர் சேனாரத்ன குறிப்பிட்ட சீன ஈழம் மற்றும் தமிழ் ஈழம் என்ற கருத்து, இலங்கையில் தமது சுய உரிமைகளை நிலைநாட்டி, தமது சொந்த மண்ணிலேயே ஒரு பரந்துபட்ட அதிகார பரவலாக்கத்துடன் வாழ்வதற்கு ஏங்கி நிற்கும் ஓர் இனத்தின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்ய மறுத்தவர்களாக இலங்கையின் ஆட்சியாளர்கள் இருப்பதை சுட்டிக்காட்டுகின்றது.*

*அதேசமயம், வல்லாதிக்க வேட்கை கொண்ட ஒரு வல்லரசுக்கு அடிபணிந்து, ஒரு பாரிய நிலப்பரப்பையே இலங்கையின் தன்னாதிக்கத்துக்கும் அப்பாற்பட்ட வகையில் புதிதாக அமைப்பதற்கு அனுமதித்திருப்பது, இலங்கையின் இறைமைக்கு சவால்விடும் ஒரு நடவடிக்கைக்கு துணைபோவதாகவும், காலப்போக்கில் ஒரு வேறுபட்ட சமூக, கலாசார, பொருளாதார செல்வாக்கிற்கு இலங்கையை வலிந்து உட்படுத்துவதாகவுமே காணப்படுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 26 திங்கட்கிழமை சித்ரா பௌர்ணமி
பிலவ வருடம் - சித்திரை 13

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 6.00 - 7.30 |
| ராகு காலம் | : | 7.30 - 9.00 |
| திதி | : | பௌர்ணமி |



## இன்றைய ராசிபலன்

**26.04.2021**

**மேடம்**
உடல் நலத்தில் கவனம் தேவை. நட்பு வட்டம் விரியும். செலவுகள் இருந்தாலும் அது சுபச்செலவுகளாகவே இருக்கும். பணியிடத்தில் நீங்கள் நினைக்காத ஓர் இனிய திருப்பம் உண்டு.

**இடபம்**
மேடையில் ஏறிப் பாராட்டும், கைதட்டலும் பெறுவீர்கள். பயமின்றி மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையும், நேர்மையும் உள்ளவர் என்று நிரூபணமாகும்.

**மிதுனம்**
பணியிடத்தில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. போக்குக் காட்டிக்கொண்டிருந்த திருமணம் இன்று நிச்சயமாகும். தந்தைக்கு சிறு உபாதைகள் ஏற்பட்டு சரியாகிவிடும்.

**கடகம்**
தாயின் ஆரோக்யத்தை கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களின் அமைதியான அணுகுமுறையால் குடும்ப பிரச்னை சரியாகும். சற்று நிதானமான முன்னேற்றமானாலும் நல்லபடியாகவே நடக்கும்.

**சிம்மம்**
வாக்கில் பொலிவுடன் எல்லோரும் பாராட்டும்படியாகப் பேசுவீர்கள். மற்றவர் பிரச்னையைத் தீர்த்து வைத்து நெகிழ்ச்சி அளிப்பீர்கள். நல்ல விஷயங்களைச் செய்து சமூகத்தில் நற்பெயர் எடுப்பீர்கள்.

**கன்னி**
குழந்தைகள் பற்றிய பயமும், கவலையும் நீங்கி நிம்மதி வரும். உறவினருக்காக நல்ல வகையில் செலவு செய்து அவரின் நல்லாசி பெறுவீர்கள். உறவினர், நண்பர்கள் இடையே மத்தியஸ்தம் செய்வீர்கள்

**துலாம்**
இன்று பேச்சில் மிகவும் கவனமாக இருந்தால் கவலையில்லை. கவர்ச்சி அம்சம் அதிகமாகி இன்று வெற்றிகளைக் குவிப்பீர்கள். சருமப் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**விருட்சிகம்**
சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். கவனம் சிதறும். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை. பணி, தொழில் தொடர்பான விஷயங்களில் வெற்றி உண்டு.

**தனுசு**
வீண் அலைச்சல், வேலைப்பளு இருக்கும். மகிழ்ச்சி கூடும். மேலதிகாரிகளை அனுசரித்து சென்று நற்பெயர் பெறுவீர்கள். யாருடனும் வீண் வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்**
வாழ்க்கைத்துணையை அனுசரித்து சென்று நன்மை அடைவீர்கள். சமீப நாட்களில் இருந்த மன உளைச்சல் முழுமையாக தீரும். தவறுகளைத் திருத்திக்கொண்டு சங்கடத்திலிருந்து மீள்வீர்கள்.

**கும்பம்**
நேற்றைய கவலைகள் அனைத்தும் தீர்ந்து நிம்மதி ஏற்படும். வீண் பேச்சை குறையுங்கள். உதவி செய்வதில் கவனம் தேவை. எடுத்த விஷயங்களை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம்.

**மீனம்**
எதிர்ப்புகள் விலகும். நிதிநிலை திருப்தி தருவதாக இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். தனிமையை விரும்புவீர்கள். பொருட்களை கவனமாக பாதுகாத்து கொள்வது அவசியம்.

# முடங்கியது தமிழ்நாடு




சென்னை, ஏப். 26

தமிழ்நாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முழுநாள் ஊரடங்கு கடைப்பிடிக்கப்பட்டது. அதிகரித்து வரும் கொரோனா தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு 36 மணி நேர தொடர் ஊரடங்கு நேற்று ஆரம்பமானது.

ஊரடங்கு காரணமாக அத்தியாவசிய சேவைகள் தவிர ஏனைய அனைத்து சேவைகளும் முடக்கப்பட்டன. மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை உட்பட முக்கிய நகரங்களுக்கான அனைத்து போக்குவரத்து சேவைகளும் துண்டிக்கப்பட்டன. மக்கள் நடமாட்டம் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டமையால் நேற்றைய தினம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இந்தியாமுழுவதும்கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் தமிழ்நாடு முழுவதும் வார இறுதிநாளில் முற்றாக முடக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## வீதியில் நடந்த திருமணம்!

கடலூர், ஏப். 26

கடலூரில் முழு ஊரடங்கால் கோயிலில் அனுமதி மறுக்கபட்டதால் கோயில் வாசல் தெருவில் 20இற்கும் மேற்பட்ட இணைகள் திருமண பந்தத்தில் இணைந்தனர்.

கடலூர் - திருவந்திபுரத்தில் பிரசித்திபெற்ற தேவநாத சுவாமி கோயிலிலேயே இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

வழக்கமாக இந்தக் கோயிலில் ஒருநாளில் 200இற்கும் மேற்பட்ட திருமணங்கள் நடக்கின்றன. கொரோனா தொற்று அதிகரிப்பால் நேற்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் முடக்கப்பட்டது.

இதனால், கோயிலில் திருமணம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால், கோயிலின் வாசல் தெருவில் 20இற்கும் மேற்பட்ட இணைகள் திருமண பந்தத்தில் இணைந்தனர். (ஐ)



## மீனாட்சியம்மன் திருக்கல்யாணம் பக்தர்கள் பங்கேற்பின்றி நடந்தது!

மதுரை, ஏப். 26

மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான மீனாட்சி அம்மன்- சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நேற்றுமுன்தினம் கோயில் வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும், திருவிழா முடிவடைந்த பின்னர் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

கொரோனா தொற்று பரவல் காரணமாக தமிழ்நாட்டில் பொது முடக்கம் நேற்று நடைமுறைக்கு வந்தது. இதனால், கோயிலில் பக்தர்கள் பங்கேற்க அனுமதி வழங்கப்படவில்லை.

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் சித்திரைத் திருவிழா 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்றைய தினத்துடன் கோயில் திருவிழா நிறைவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒரேநாளில் மது விற்பனை ரூ. 645 கோடி!

சென்னை, ஏப். 26

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டும் ஒரே நாளில் 258 கோடி இந்திய ரூபாவுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 645 கோடி ரூபா -மதுபான வகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கொரோனா பரவலால் நேற்று தமிழ்நாட்டில் 36 மணிநேர பொது முடக்கம் நடைமுறைக்கு வந்தது. இதனால், நேற்று முன்தினம் தமிழகத்தின் மதுபான விற்பனை நிலையங்களில் அதிக கூட்டம் ஏற்பட்டது.

சென்னையில், 58.37 கோடி இந்திய ரூபாவுக்கும், திருச்சி - 48.57 கோடி ரூபாவுக்கும், மதுரையில் 49.43 கோடி ரூபாவுக்கும் மது பானங்கள் விற்பனையாகின. (ஐ)

## ஒருநாளில் தொற்று பாதிப்பு 15 ஆயிரத்தை நெருங்கியது!

சென்னை, ஏப். 26

தமிழ்நாட்டில் நாளாந்த கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், நேற்று முன்தினம் மட்டும் தொற்றாளர் எண்ணிக்கை 15 ஆயிரத்தை நெருங்கியது. அத்துடன் 80 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இரவு வரையான 24 மணி நேரத்தில், தொற்றாளர்களின் எண்ணிக்கை 14 ஆயிரத்து 842 ஆக புதிய உச்சத்தை தொட்டுள்ளது. அதிக பட்சமாக சென்னையில் 4 ஆயிரத்து 86 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதையடுத்து தமிழ்நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்து 66 ஆயிரத்து 329 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் ஒரேநாளில் 80 பேர் தொற்றால் இறந்தனர். இதனால் ஒட்டுமொத்த மரண எண்ணிக்கை 13 ஆயிரத்து 475 ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘தமிழ் பௌத்தம்’ சிறப்பு உரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 26

‘தமிழ்ப் பௌத்தம் - ஒரு தொல்லியல் நோக்கு’ என்ற தலைப்பில் விசேட சமூக, விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் இயங்கிவரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் தொடக்க உரையை இளம் ஆய்வாளர் ச. சத்தியதேவன் ஆற்றவுள்ளார். சிறப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆர்வமுடைய அனைவரும் சுகாதார விதிகளை பின்பற்றி பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# யாழ்ப்பாணம் உட்பட 3 பகுதிகளின் பாடசாலைகளை பூட்ட நேரலாம்!

## கல்வி அமைச்சின் செயலர்



கொழும்பு, ஏப். 26

**தற்போதைய கொரோனா ஆபத்து நிலைமை காரணமாக பாடசாலைகள் மூடுவதற்கு கொவிட்-19 நோய் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயலணி இது வரை எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.**

எனினும் யாழ்ப்பாணம் மாநகரம், குளி யாப்பிட்டிய மற்றும் பாணந்துறை ஆகிய அதிக ஆபத்துள்ள பகுதிகளில் பாடசாலைகளை மூடும் தீர்மானங்கள் எடுக்கப்பட லாம் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

பாடசாலைகளை மூடுவதற்கு அறிவித்தல் கொடுத்தால் மட்டுமே அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், எது எப்படி இருப்பினும், தற்போது வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வழக்கம் போல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலை ஒன்றின் எந்தவொரு அவசரகால சூழ்நிலையையும் நிர்வகிக்க தேவையான அதிகாரங்கள் பாடசாலை அபிவிருத்திக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைக்குள்ளே கொவிட்-19 வைரஸ் அதிகமாக இருப்பதை அறிந்தால் பெற் றோர், அதிபர் அல்லது ஆசிரியர் கள் பாடசாலை அபிவிருத்திக் குழுக்களுடன் பேச்சு நடத்த முடியும். குழந்தைகளின் எதிர் காலத்திற்கான பாடசாலை நடவடிக்கைகளைத் தொடர்வதை உறுதி செய்வது எனது பொறுப்பு.

கொரோனா வைரஸ் வழிகாட்டுதலின் கீழ் 10 ஆயிரத்து 165 பாடசாலைகள் செயல்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம், குளியாப்பிட்டி, பாணாந்துறை போன்ற அதிக ஆபத்து உள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளை மூட முடியும்.

எவ்வாறாயினும், பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை நடத்த ஜனாதிபதி அல்லது கல்வி அமைச்சர் உத்தரவு பிறப்பித்தால் அமைச்சு அதற்கு கட்டுப்படும். மாணவர்களுக்கு ஆபத்துக்களைக் குறைத்து கல்வி நடவடிக்கைகள் தொடர்வதை உறுதி செய்வது எனது கடமையாகும்.

எதிர்காலத்தில் முடிவுகளை பரிசீலிக்கும்போது பயனளிக்கும் தகவல்களை சமர்ப்பிக்க அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# எரிகாயமடைந்த பெண் மரணம்: கணவரை கைது செய்ய உத்தரவு!

யாழ்ப்பாணம், ஏப். 26

எரிகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 19 வயதான 8 மாத கர்ப்பவதி பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உடுப்பிட்டியை சேர்ந்த சிந்துஜன் ரிசிக்கா என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த பெண், தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தன்னை எரியூட்டினார் என்று விசாரணையில் கூறப்பட்டது. ஆனால், அந்தப் பெண்ணின் இறப்பில் சந்தேகம் உள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் தெரிவித்துள்ளார். அத்துடன், அந்தப் பெண்ணின் கணவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாரை கேட்டுள்ளார்.

குறித்த பெண்ஒருவருடத்துக்கு முன்னர் திருமணம் செய்துள்ளார். தற்போது 8 மாத கர்ப்பவதியான அவர், கடந்த 17ஆம் திகதி எரிகாயங்களுடன்யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார்.

இவரின் மரணம் குறித்து திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை நடத்தினார்.

அவரின் உடலில் உள்ள தீக்காயங்கள் தொடர்பில் அவர் சந்தேகமடைந்த அவர், பெண்ணின் கணவரை கைது செய்து நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்துமாறு கேட்டுள்ளார். (ஐ - 3)

## ஆசிரியையை மோதிவிட்டு தப்பிய டிப்பர் 3 நாட்களின் பின் பொலிஸிடம் சிக்கியது!

வடமராட்சி, ஏப். 26

பொலிஸார் துரத்திய போது, ஆசிரியை ஒருவரை மோதி தள்ளிவிட்டு தப்பிச்சென்ற டிப்பர் வாகனத்தை எழுதுமட்டுவாழ் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸார் கண்டுபிடித்தனர். அத்துடன்அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

குறித்த விபத்து இடம்பெற்று மூன்று நாட்கள் கழித்து இந்தக் கைதுசம்பவம்இடம்பெற்றுள்ளது.

வடமராட்சிக்கம் பகுதியில் பொலிஸார் டிப்பர் ஒன்றை துரத்திச் சென்றனர். அவர்களுக்குப் போக்கு காட்டிய டிப்பர் சாரதி ஒழுங்கைகள் ஊடாக அதனை செலுத்திச் சென்றார்.

இதன்போது ஒழுங்கை ஒன்றுக்குள் மோட்டார் சைக்கிளில் வந்த ஆசிரியையை மோதித்தள்ளிவிட்டு டிப்பர் தப்பிச் சென்றது. இதில் படுகாயமடைந்த அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், தப்பியோடிய டிப்பர் மூன்று நாட்களின் பின்னர் எழுதுமட்டுவாழ் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் பிடிக்கப்பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

சாரதியை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ - 3)





வடமராட்சி வல்லை நாகதம்பிரான் (வல்லை நாற்சந்தியடி) ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.





குப்பிழான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றபோது...

## 7 கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதையுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் மாநகரில் பகுதியில் 5 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது, சுமார் 7 கோடி ரூபாய் பெறுமதியான 7 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என முன்னர் தெரிவிக்கப்பட்டது. எனினும் சரியான அளவு தொடர்பில் பொலிஸார் தகவல் வெளியிடவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தை மேற்கு தவிசாளர் காலமானார்!

மன்னார், ஏப். 26

மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் செல்லத் தம்பு என அழைக்கப்படும் ஆசிர்வாதம் சந்தியோகு 66ஆவது வயதில் நேற்று காலை காலமானார்.

சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலே அவர் காலமானார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாந்தை மேற்கு பிரதேச சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிலையில் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தே.அ.அட்டை கண்டெடுப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 26

யூட்ஜெயக்குமார் ஜெகன் ராஜ் என்பவரின் தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அடையாளத்தை உறுதிப்படுத்தி இல. 707 இல.707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். (ஐ)

# வற்றாப்பளை கண்ணகை பொங்கல்: நேர்த்திக் கடன்கள் செலுத்தத் தடை!

## ஒத்துழைப்பு கோருகிறது சுகாதார பிரிவு

முல்லைத்தீவு, ஏப். 26

**வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழாவை சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என்று முல்லைத்தீவு மாவட்ட தொற்று நோயியல் மருத்துவ அதிகாரி மருத்துவர் வி.விஜிதரன் தெரிவித்துள்ளார்.**



ஆலய பொங்கல் விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஆலய பொங்கல் விழாவின் போது முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், தொற்று நீக்கம் செய்தல் மற்றும் சமூக இடைவெளிகளை பேணுதல் ஆகியன அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆலய உள் மற்றும் வெளி வீதிகளின் அளவினைக் கொண்டு அவை குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். ஆலயத்தினுள் பிரவேசிப்பவர்கள் தொடர்பில் அவர்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியன பதிவு செய்யப்பட வேண்டும்.

குடும்பமாக வரும் அடியவர்கள் வீட்டிலிருந்தபடி இவற்றை தாளில் கொண்டு வருதல் பதிவு செய்பவர்களின் கடமையை இலகுபடுத்துவதுடன் அவ்விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பிற்பாடு அனுமதிக்கப்படுவர். ஆலயத்திற்கு உள்வரும் பாதை மற்றும் வெளியேறும் பாதை தனித்தனியாக அமைக்கப்பட வேண்டும். இது கடுமையாக கண்காணிக்கப்படும்.

காவடி எடுத்தல் முதலான நேர்த்திக் கடன்கள் தற்போதைய நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது. அடியவர்கள் ஆலய வழிபாட்டிற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டு தேவையற்ற விதத்தில் ஒன்றுகூடல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

கடைகள் பிரதான வீதிவரை தற்போதைய நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசியமானதெனின் மூன்று தினங்களிற்குள் பி.சி.ஆர் செய்து கொண்டவர்கள் மட்டும் அனுதிக்கப்படுவார்கள்.

அன்னதானங்கள் முதலியன சுகாதார முறைப்படி பொதி செய்யப்பட்டு மக்கள் ஒன்று கூடாத வகையில் வழங்கப்பட வேண்டும். ஆலய சூழலில் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சுகாதார துறையினருடன் தொடர்புகளை பேணுதல் தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளல் முக்கியமானது என்று தெரிவித்தார்.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் திருவிழா மே 24ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஓட்டோ - மோ. சைக்கிள் விபத்து: சிறுமி மரணம்: மூவர் படுகாயம்!



வவுனியா, ஏப். 26

ஓட்டோ - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் 9 வயது சிறுமி உயிரிழந்தார். அவரின் தாய் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

வவுனியா - இரட்டைப் பெரியகுளத்தில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம் பெற்றது. இதில், கல்குண்ணாமடுப் பகுதியை சேர்ந்த ஆகாசா ரசினி என்ற 9 வயது சிறுமியே உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுமி, தனது தாயருடன் ஓட்டோவில் சிதம்பரபுரம் வைத்தியசாலைக்கு சென்று மருந்து எடுத்துவிட்டு கல்குண்ணாமடுவில் உள்ள அவரின் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.

அச்சமயம், எதிரே வந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது. இதன்போது ஓட்டோவிலிருந்து தூக்கி வீசப்பட்ட சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சிறுமியின் தாயாரும் மோட்டார் சைக்கிள்தாரியும், ஓட்டோ சாரதியும் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஈரப்பெரியகுளம் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# வவுனியா வைத்தியசாலைக்கு 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு!

## திலீபன் எம்.பி. தகவல்

வவுனியா, ஏப். 26

வவுனியா பொது வைத்திய சாலையில் விபத்து, அவசர சிகிச்சை பிரிவுகளை அமைப்பதற்கு 26 கோடியே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்துள்ளார்.

மேலும், வவுனியா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவின் இரண்டாம் கட்ட கட்டிடம் பூர்த்தியாகவில்லை. இதனால், பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

இந்த விடயம் குறித்து எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு சென்றேன். அவர் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் பேசி இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிதியில், 10 கோடி ரூபாய்க்கான வேலைத்திட்டம் இந்த வருடமும், 16.1 கோடி ரூபாய்க்கான வேலைத்திட்டம் அடுத்த வருடமும் இடம்பெறும் - என்றார்.

# அபிவிருத்தி அதிகாரிகளாக நாளை 350 பேர் பதவியேற்பர்!

மானிப்பாய், ஏப். 26

வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் 3ஆம் தரத்திற்கு மாகாண மட்டத்தில் பயிற்சியை நிறைவு செய்த 350 பட்டதாரிகளுக்கு பயிற்சியின் பின்னர் வட மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - (நிர்வாகம்) அலுவலகத்தினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வட மாகாண ஆளுநரின் அனுமதிக்கு அமைய ஜனவரி முதலாம் திகதி முதல் அபிவிருத்தி அலுவலர்களாக நியமனம் பெறும் அனைவரும் நாளை செவ்வாய்க்கிழமை முதல் வட மாகாணத்தில் நியமன கடிதத்தில் குறித்தொதுக்கப்பட்ட அலுவலகங்களில் நிரந்தர அதிகாரிகளாகக் கடமையைப் பொறுப்பேற்பர்.

நிரந்தர நியமனத்தின்போது மூன்று வருட தகுதிகாண் நிலைக்கு உட்படுத்தப்படுவர். நியமன கடிதத்தில் விதந்துரைக்கப்பட்ட கடமைகளை திறமையாகவும்- நன்னடத்தையாகவும் நிறைவேற்றி வினைத்திறனுடன் சேவை செய்து வடக்கு மாகாண அரச சேவைக்கு பொருத்தமானவர் என்பதனை தங்களது தகுதிகாண் காலத்தில் அவர்கள் நிரூபித்தல் வேண்டும். இவ்வாறு தகுதி காண் காலத்தில் அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தால் மட்டுமே இறுதியில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நியமன கடிதம் நியமன அதிகாரியால் வழங்கப்படும். மேலும், நிரந்தர நியமன திகதியில் இருந்து மூன்று வருட காலப்பகுதிக்குள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# ரிஷாத் மற்றும் ரியாஜை 3 மாதங்கள் தடுப்புக்காவலில் விசாரிக்க தீர்மானம்

கொழும்பு,ஏப்.26

கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரை 90 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்ட இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இணைந்து தொடர்ந்து விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குண்டுதாரிகளுக்கு உதவியமை மற்றும் நெருங்கிய தொடர்பைப் பேணியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் தடுப்புக் காவல் உத்தரவொன்று பெறப்பட்டிருந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மூத்த ஊடகவியலாளர் நல்லதம்பி நெடுஞ்செழியனின் முதலாவது ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் ஹற்றன் சி.டபிள்யூ.எவ். மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது அவரின் உருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுமலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# மட்டக்களப்பில் தமிழின பரம்பலை திட்டமிட்டு குறைக்கும் சதியில் அரசு

## சாடுகிறார் கருணாகரம் எம்.பி.

மட்டக்களப்பு, ஏப். 26

கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டு தமிழர்களின் இப்பரம்பலை கடந்த காலத்தில் குறைத்த அரசாங்கம், இறுதியாக 74 வீதம் தமிழர்கள் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் இனப்பரம்பலை குறைப்பதற்காக மிகவும் சாதுரியமாக தங்களது காரியங்களை எல்லைப் புறங்களில் அரங்கேற்றி வருகிறது என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் பற்று - கரடியனாறு பிரதேசத்தின் கதிரவன் விளையாட்டுகழகத்தின் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று பேசியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய அவர் தெரிவித்தவை வருமாறு:

"தமிழர்களுக்கு மட்டுமல்ல நாட்டின் அனைத்து மக்களுக்கும் இந்த அரசாங்கம் அநியாயம் இழைத்து வருகின்றது. எதிர்த்துப் பேசுபவர்கள் சிறைப்பிடிக்கப்படுகின்றனர். அது மட்டுமின்றி பிணையெடுக்க முடியாதளவிற்கு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைப்



படுத்தப்பட்டு வருகின்றனர். தமிழினம் கடந்த காலங்களில் பலவகையிலும் துன்புறுத்தப்பட்டது. இதனால், தமது உரிமைகளுக்காக அகிம்சைப் போராட்டம் நடத்தி பின்னர் ஆயுதப்போராட்டம் நடத்தினர். தற்போது, ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 12 வருடங்களாகின்றன.

"2019ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. அவர்கள் நீண்டகால திட்டமாக எமது பிரதேசத்தை குறிப்பாக கிழக்கு மாகாணத்தை கபளீகரம் செய்வதற்கு முயற்சி செய்துகொண்டு இருக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து ஏற்கனவே மாகாணசபைக்கும் பாராளுமன்றத்திற்கும் பிரதிநிதிகள் செல்லக் கூடியளவிற்கு இந்த நாடு சுதந்திரமடைந்த காலத்திலிருந்து குடியேற்றங்களை செய்து பெரும்பான்மை இனப்பரம்பலை அங்கு அதிகரித்திருக்கின்றார்கள்.

"இறுதியாக 74வீதம் தமிழர்கள் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் இனப் பரம்பலை குறைப்பதற்காக மிகவும் சாதுரியமாக தங்களது காரியங்களை எல்லைப்புறங்களில் அரங்கேற்றி வருகின்றார்கள். பொலநறுவை எல்லையிலிருந்து மயிலத்தமடு, மாதவனை, கார்மலை, மேய்ச்சல்கல், வெட்டிப்போட்ட சேனை, கெவிலியாமடு என அம்பாறை வரை எமக்கான மேய்ச்சல் தரைகளை அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களிலிருந்து வருகை தந்த சிங்கள பெரும்பான்மையினருக்கு சேனைப் பயிர்ச் செய்கைக்கும் மரமுந்திரிகை செய்கைக்கும் என இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என காணிகளை பகிர்ந்தளித்து எதிர்காலத்திலே குடியேற்றுவதற்கான திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கின்றனர். இதனை வியாழேந்திரன், பிள்ளையான் போன்றவர்களும் தடுக்க முன்வர வேண்டும் - என்றார். (ஐ)

# பரவும் புதிய வைரஸ் மிகவும் ஆபத்தானது

## எச்சரிக்கிறார் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் தற்போது பரவும் புதிய கொரோனா வைரஸ் வகை மிகவும் ஆபத்தானது என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பொதுமக்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் எனவும், விசேடமாக இந்தியாவின் நிலைமையைக் கருத்தில் கொண்டு அனைவரும் பொறுப்புடன் செயற்படும் படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் கொரோனாவின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தப் புதிய வகை கொரோனா வைரஸ், முன்னரைவிடவும் தீவிரமாகப் பரவும் தன்மை கொண்டது. இந்த வைரஸ், தொற்று ஏற்பட்டு அறிகுறிகள் தோன்றும்போது நோயாளியின் நுரையீரலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது.

பிரிட்டனில் பரவி வரும் கொரோனா வைரஸை ஒத்த வைரஸே இலங்கையிலும் பரவுகின்றது எனத் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளிலிருந்து அறிய முடிகின்றது. எனினும், உத்தியோகபூர்வ முடிவுகளை வெளியிட சில தினங்கள் ஆகலாம்.

எனினும், பொது மக்கள் அதுவரை, காத்திருக்காது சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்" - என்றார். (ஐ)

# திருமலையில் காயங்களுடன் சடலம் மீட்பு!

திருகோணமலை, ஏப். 26

திருகோணமலை குச்சவெளி பகுதியில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை, குச்சவெளி - மதுரங்குடா பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட நபரின் உடலில் காயங்கள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பான விபரங்கள் இன்னும் கண்டறியப்படாத நிலையில், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## கொரோனா பரவல் எதிரொலி!

# மட்டக்களப்பில் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கினர் பொலிஸார்!

மட்டக்களப்பு, ஏப். 26

கொரோனா பரவல் நாடு முழுவதும் தீவிரம் பெற்று வருகின்றது. இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களை தொற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாக, நேற்று முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் போக்குவரத்தில் முறையாக சுகாதார நடைமுறைகளை பேணாத போக்குவரத்து சேவைகள் தொடர்பில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெட்டியாராட்சி தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது முகக்கவசம் அணியாதவர்கள், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களில் சுகாதார நடைமுறையை பேணாத வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

முகக்கவசங்களை சரியாக அணியாதவர்களுக்கு அது தொடர்பிலான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இவ்வாறான தொடர்ச்சியான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஹறின் எம். பியை கைது செய்யும் நிகழ்ச்சிநிரலே ரிஷாத் எம்.பி. கைது!

## ஊழல் எதிர்ப்பு முன்னணி சாடல்

கொழும்பு, ஏப். 26

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹறின் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டுள்ளார்." - இவ்வாறு ஊழல் எதிர்ப்பு முன்னணி அமைப்பின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் தெரிவித்தார்.இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஹறின் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான சூழலை அமைப்பதற்காக அரசு இந்த வெட்கக்கேடான செயலைச் செய்துள்ளது.

ரிஷாத் பதியுதீன், பஸில் ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரிஷாத் பதியுதீனை அவருடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு சுதந்திரமாகச் செயபட பஸில் ராஜபக்ச அனுமதித்திருந்தார்.

ரிஷாத் பதியுதீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ரவூப் ஹக்கீம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்ததை நாங்கள் மறக்கவில்லை. இதனால் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 20ஐ நிறைவேற்றியிருந்தது என்பதையும் நாங்கள் மறக்கவில்லை" - என்றார். (ஐ)

# யாழ். கனகரத்தினம் ம.ம.வி தனிமைப்படுத்தப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினர் அனுமதி பெறாது பாடசாலை நிர்வாகம் சனசமூக நிலையம் ஒன்றுக்கு விளையாட்டு நிகழ்வு நடத்துவதற்கு பாடசாலை மைதானத்தை வழங்கியமையால் பாடசாலை தனிமைப் படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம், சனசமூக நிலையத்தின் விளையாட்டு போட்டி விமரிசையாக இடம்பெற்றதோடு பல நூற்றுக்கணக்கான மக்களும் அந்த விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் அடிப்படையில் நேற்று பாடசாலை, விளையாட்டு மைதானம் என்பவை தனிமைப்படுத்தப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- மாலி

**தந்தை செல்வாவின் 44ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

# செல்வநாயகம் ஒரு சகாப்தம்



## மாயமாய் ஒரு மந்திர சக்தி

“தீர்ப்பு தமிழ் மக்களுடையது. நடப்பவற்றை எல்லாம் பார்க்கையில், இலங்கையில் தமிழ் மக்கள் இரண்டாந்தர பிரஜைகளாகவா அல்லது சுதந்திர மக்களாகவா வாழப்போகிறார்கள் என்ற தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை, இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிச்சயம் உண்டு என்பது என்னுடைய கொள்கை. என்னுடைய இந்த நிலைப்பாட்டில் அரசாங்கம் என்னுடன் போட்டியிடட்டும். நான் தோற்றால், நான் எனது கொள்கையைக் கைவிடுகிறேன். அரசாங்கம் தோற்றால், தமிழ் மக்கள் அரசாங்கத்தின் கொள்கையையும் அதன் அரசமைப்பையும் ஆதரிக்கிறார்கள் என்று கூறுவதை நிறுத்தவேண்டும்.”- இப்படி, அரசாங்கத்துக்கு சவால் விடுக்கவல்ல ஒரு தலைவரை இலங்கையில் தமிழினம் பெற்றிருந்தது.

இடதுசாரி கூட்டணியுடன், 1970 தேர்தலில் அமோக வெற்றியீட்டிய சிறிலங்கா சுதந்திர கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, சோல்பரி அரசியலமைப்பை அகற்றி, இலங்கையின் புதிய குடியரசு அரசியலமைப்பைக் கொணர்ந்தார். சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும் முன்னுரிமையளிக்கும் இந்த அரசியலமைப்பு உருவாக்கத்தில் தாம் பங்குபற்றாவிட்டால், தமது சுயநிர்ணய உரிமையின் அடிப் படையில், பிரிட்டிஷார் ஏற்படுத்திய ஆட்சி முறைமைக்கு முன்னையதான நிலைக்கு தாம் திரும்ப முடியும் என்ற எண்ணத்துடன், வல்வெட்டித்துறையில் கூடிய தமிழ் கட்சிகள் பிரதேச சுயாட்சி, மொழி உரிமை, குடியேற்றம், வேலைவாய்ப்பு, இந்தியத் தமிழர் குடியுரிமை என்பவை தொடர்பிலான ஆறு அம்ச கோரிக்கை ஒன்றை முன்வைத்தபோது அதனை நிராகரித்த அரசாங்கம், அரசியல் நிர்ணய சபையில் தமிழரசு கட்சி எம். பிக்கள் சாட்சியமளிக்கவும் அழைக்க மறுத்தது. இந்த நிலைமைகளில், புதிய குடியரசு அரசியலமைப்புடனான தேசிய அரசு பேரவையின் வைபவரீதியான தொடக்க வைபவத்தை 1972 மே 22ஆம் திகதி தமிழரசு கட்சி பகிஷ்கரித்து, அரசுக்கு இந்த சவாலை விடுத்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் தனது எம். பி. பதவியை இராஜிநாமா செய்தார்.

கண்டி இராச்சியத்தின் இணைப்புடன் 1815இல் முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டினுள் கொணர்ந்த பிரிட்டிஷார் கரையோர சிங்களவர், கண்டி சிங்களவர், தமிழர் என பிரிபட்டிருந்த நிர்வாகங்களை, கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபார்சில் இல்லாதொழித்தனர். இன அடிப் படையில் சட்ட சபைக்கு பிரதிநிதிகள் நியமிக்கப் பட்டனர். 1931இல் டொனமூர் ஆணைக்குழு அறிமுகப்படுத்திய சர்வசன வாக்குரிமையில் இலங்கை சட்டசபை சிங்கள பெரும்பான்மை வசமானபோது, தமிழர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையில் சட்ட சபையில் ஐம்பதுக்கு ஐம்பது சம பிரதிநிதித்துவம் (சிங்களவர்கள் 50 வீதம் கூட்டு சிறுபான்மை இனத்தவர் 50 வீதம்) கோரினர். 1944இல் அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கான சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோது, அதில் தமிழர் நலன்களை முன்வைப்பதற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி உதயமானது. அப்போதுதான் இளம் வழக்கறிஞர் செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் இணைந்து அரசியலில் பிரவேசித்தார். சம பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி, இருவரும் ஆணைக்குழு முன் வாதிட்டபோதும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 1947 பொதுத் தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக, செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.



1961 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தில் மூதூர் எம்.பி., த.ஏகாம்பரம், திருகோணமலை எம்.பி.,எ. ஆர்.இராஜவரோதயம் ஆகியோருடன் தந்தை



ஈழத்துத் தந்தையும், தமிழ்நாட்டின் தந்தையும்



1957 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்காவுடன்

இலங்கையிலிருந்து மலேயாவுக்கு குடிபெயர்ந்த தமிழர்களது அக்காலத்து வழக்குப்படியே, மலேயாவில் பிறந்த சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம், தன்னுடைய நான்காவது வயதில், கல்விக்காக தாயாருடனும் சகோதரர்கள், சகோதரியுடனும் இலங்கை வந்தார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரி ஆகியவற்றில் கற்று, கொழும்பு சென் தோமஸ் கல்லூரியில் லண்டன் பல்கலைக்கழக வெளிவாரி விஞ்ஞான பட்டதாரியாக ஆசிரிய பணியைத் தொடங்கினார். வெஸ்லி கல்லூரிக்கு மாறி, ஆசிரிய பணியுடனேயே இலங்கைச் சட்டக் கல்லூரி மாணவனானார். உயர் நீதிமன்றத்தில் சிவில் வழங்குகளிலான நிபுணத்துவத்துடன் இராச வழக்கறிஞரானவருக்கு (King Counsel) இரண்டு தடவைகள் வழங்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியை அவர் ஏற்கவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது மலையக தோட்டங்களில் வேலைக்காக கொண்டுவரப்பட்ட தென்னிந்திய தமிழர்கள் இலங்கையின் சனத்தொகையில் 11 வீதத்தினராக விருந்தபோது, அவர்களில் பெரும்பாலானோரை நாடற்றவர்கள் ஆக்கும் விதத்தில் 1948இல், இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தை அரசாங்கம் கொணர்ந்தது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்தது. எனினும், சில தினங்களில் ஜீ. ஜீ. பொன்னம்பலம், டி. எஸ். சேனநாயக்கவின் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் இணைய தீர்மானித்ததும், தமிழ்க் காங்கிரஸ் பிளவுண்டது. செல்வநாயகமும் அவரது சகாக்களான ஈ. எம். வி. நாகநாதன், கு. வன்னியசிங்கம் ஆகியோரும் 1949 டிசம்பர் 18ஆம் திகதி கொழும்பில், அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தார்கள்.

வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு தமிழ் மாநிலமும், ஏனைய ஏழு மாகாணங்களுமிணைந்த மற்றொரு சிங்கள மாநிலமுமாக இலங்கையில் ஒரு சமஷ்டி முறைமை, தமிழ் அரசுக் கட்சியின் கொள்கையாகவிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை நிறுத்துதல், ‘தமிழ் பேசும்’ மக்களாக இலங்கை, இந்திய தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றிணைதல், தமிழ் மொழிக்கு சிங்கள மொழியுடன் சம அந்தஸ்து என்பனவும், கூடவே அதன் கொள்கைகளாகவிருந்தன. ஆனால், செல்வநாயகம் 1952 தேர்த லில் தோல்வியுற்றார்.

1956 தேர்தலில் அவர் மீண்டும் வெற்றிபெற்றபோது, இலங்கையில் தமிழ்த் தேசிய உணர்வும் புதிதாய் மலர்ந்தது. பண்டாரநாயக்கவின் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து, 1956 ஜூன் 5ஆம் திகதி காலி முகத் திடலில் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற அஹிம்சைப் போராட்டம், இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் பாதையையும் பயணத்தையும் வரையறுத்தது.

⇨

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்வீக முறையிலான சட்ட மறுப்பு நடவடிக்கைகளில் இறங்குவோம் என்று தெரிவித்து, சமஷ்டி முறைமையிலான சுயாட்சி, தமிழுக்கு சம அந்தஸ்து, மலையக தமிழர்களின் வாக்குரிமை, சிங்கள குடியேற்றங்களை மீளப்பெறுதல் ஆகிய, திருமலை மாநாட்டு தீர்மானங்களில் அரசுக்கு ஓராண்டுகால காலக்கெடு விதித்ததில், 1957 ஜூலை 26ஆம் திகதி, பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது. பிரதேச சபைகளுக்கான சட்டமூல வரைவு ஒன்று உடன்பாடானது. விவசாயம், குடியேற்றம், கல்வி, கைத்தொழில், காணி, காணி அபிவிருத்தி முதலான பல்வேறு விடயங்களில் ஏற்பட்ட இந்த உடன்பாட்டில் செல்வநாயகம் திருப்தியுறாவிட்டாலும், சமஷ்டி ஆட்சி ஒன்றுக்கான இடைக்கால ஒத்திசைவாக இந்த ஒப்பந்தத்தை அவர் கருதினார்.

நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கையாக எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி, சிங்கள தேசியவாதிகளை ஒப்பந்தத்துக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்தது. அரச திணைக்களங்களிலும் எழுந்த எதிர்ப்புக்களில், யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் சிங்கள 'சிறி' பொறிக்கப்பட்ட இலக்கத் தகடுகளுடனான பஸ் வண்டிகளை போக்குவரத்து திணைக்களம் வேண்டுமென்றே அனுப்பியது. இவ் வேளையில்தான் சிறி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது. மட்டக்களப்பில் பஸ் வண்டி ஒன்றின் இலக்கத்தகட்டை 'தார்' கொண்டு அழித்ததில் செல்வநாயகம் கைது செய்யப்பட்டு, ஒரு வாரகாலம் சிறையில் வைக்கப்பட்டார்.

பிரதமர் பண்டாரநாயக்கவின் றொஸ்மீட் பிளேஸ் இல்ல வளவினுள் கூடிய பிக்குகள் உள்ளிட்ட நூற்றுக் கணக்கானோர் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில், 1958 ஏப்ரல் 9ஆம் திகதி, அவர்கள் முன்னிலையிலேயே பண்டாரநாயக்க ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

தமிழ் அரசு கட்சியின் வவுனியா மாநாடும் நடந்ததைத் தொடர்ந்து, 1958 இனக் கலவரம் வெடித்தது. தமிழ் அரசு கட்சி தடைசெய்யப்பட்டு, செல்வநாயகம் உள்பட கட்சித் தலைவர்கள் ஜூன் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். அந்த ஆண்டின் இறுதிவரை இவர்களின் தடுப்புக் காவல் நீடித்தது.

1960 மார்ச்சில் நடைபெற்ற தேர்தலில் பிரதமர் டட்லி சேனநாயக்கவுக்கு ஆட்சியமைக்க போதிய பலம் இருக்கவில்லை. தமிழ் அரசு கட்சியின் ஆதரவை அவர் நாடினாலும், அது முன்வைத்த கோரிக்கைகளுக்கு அவர் இணங்கவில்லை. பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் கீழான பிரதேச சபைகள் சட்டமூல ஒழுங்குவிதிகள் தொடர்பில் சிறிமாவோ பண்டாரநாயக்க அப்போது இணங்கியதில், சிறிலங்கா சுதந்திர கட்சி ஆட்சி அமைக்க தாம் ஆதரவு வழங்குவதாக செல்வநாயகம் தெரிவித்ததில், மகா தேசாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார். ஆனால், தேர்தலில் இடதுசாரி கட்சிகளின் கூட்டுடன் சுதந்திர கட்சிக்கு போதுமான பெரும்பான்மை கிடைத்ததில், சிறிமாவோவுக்கு செல்வநாயகத்தின் ஆதரவு பின்னர் தேவைப்படவில்லை.

சிங்களம் மட்டும் சட்டத்தை நாடு முழுவதிலும் முழு அளவில் நடைமுறைப்படுத்த சிறிமாவோ அரசு செயல்பட்டது. முழு அளவிலான சட்ட மறுப்பு இயக்கத்துக்கு செல்வநாயகம் அறிவித்தார். 1961 பெப்ரவரி 20ஆம் திகதி அதிகாலையில், யாழ்ப்பாண கச்சேரி முன்பாக சத்தியாக்கிரக போராட்டம் ஆரம்பித்தது. பழைய பூங்காவிலிருந்து அரசாங்க அதிபர் ம. சிறிகாந்தாவும் பொலிஸ் அதிபரும் புறப்பட்ட மோட்டார் ஜீப்பை வழிமறித்து எற்பட்ட பொலிஸ் தாக்குதல்களில் ஈ. எம். வி. நாகநாதன், வீ. ஏ. கந்தையா, அ. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம். க. துரைரத்தினம் முதலான பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்பட பலர் காயமுற்றனர். கண்ணீர் புகைக் குண்டுகளை பொலிசார் பிரயோகித்தனர். 'எங்கள் விடுதலையை வெல்வதற்கான நேரடி நடவடிக்கையில் நாம் இறங்கிய இந் நாள், இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பொன்னாள்' என்று அன்று மாலையில் செல்வநாயகம் அறிவித்தார்.

சத்தியாக்கிரக போராட்டம் வடக்கு - கிழக்கு எங்கும் பரவ, தனிநாடு அமைக்கும் முயற்சியில் தமிழ் அரசுக் கட்சி முயல்வதாக தெரிவித்து, ஏப்ரல் 18 ஆம் திகதி அவசர கால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. சத்தியாக்கிரகிகள் இராணுவத்தினரால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர். தமிழ் அரசுக் கட்சி தடைசெய்யப்பட்டு, செல்வநாயகம் உள்பட பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டு, பணாகொடை இராணுவ முகாமில் வைக்கப்பட்டனர்.

ஒக்ரோபரில் தலைவர்களை விடுதலைசெய்து, மாவட்டங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்கும் மாவட்ட சபைகள் தொடர்பில் பிரதமர் சிறிமாவோ ஒரு சமரச பேச்சுக்கு முன்வந்தார். எனினும் வழக்கமான விதத்தில்,


தந்தை செல்வநாயகத்தின் திருமண நிகழ்வு

பௌத்த - சிங்கள தேசியவாதிகளின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. 1964இல் தமிழ் அரசுக் கட்சி மீண்டும் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்க, அரசு ஆட்டம்காண தொடங்கியது. சிறிமாவோ செல்வநாயகத்தை நாடினார். எனினும், அவர் அரசுக்கு ஆதரவளிக்க மறுத்ததில் பொதுத் தேர்தல் நடக்கவேண்டியதாயிற்று.

1965 பொதுத் தேர்தலில் அறுதி பெரும்பான்மை கிட்டாததில், டட்லி சேனநாயக்க செல்வநாயகத்துடன் உடன்பாட்டுக்கு வந்தார். 1965 மார்ச் 24இல் டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானது. பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தை பெரிதும் தழுவியதான விதத்தில், வடக்கு - கிழக்கில் தமிழ் நிர்வாக மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் அமைவது உள்பட, காணி அபிவிருத்தி, காணி ஒதுக்கீடு, குடியேற்றங்கள் போன்றவற்றிலான உடன்பாடுகளுடன், மாவட்ட சபைகளை உருவாக்குவது உடன்பாடானது.

தமிழ் அரசுக் கட்சியும் இணைந்த தேசிய அரசாங்கம் உருவானது. மூன்று அமைச்சு பதவிகளை டட்லி சேனநாயக்க வழங்கியபோதும், இலங்கையில் சமஷ்டி அமைப்பு ஒன்று உருவாகும்வரை அமைச்சு பதவி எதனையும் ஏற்பதில்லை என்ற தமிழ் அரசு கட்சியின் கொள்கையில், மு. திருச்செல்வத்துக்கு செனட்டர் நியமனத்தை அளித்து, அவர் அமைச்சராக்கப்பட்டார். ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு வசதியாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சை தமிழ் அரசு கட்சி கோரிய போதும் டட்லி சேனநாயக்க அதனை வழங்கவில்லை. உள்ளூராட்சி அமைச்சு பதவியை திருச்செல்வம் ஏற்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாகும் விதத்தில் தமிழ் மொழி (விஷேட ஒழுங்குகள்) சட்டம் 1966 ஜூலையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எனினும், மாவட்ட சபைகள் சட்டமூலம் ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை உறுப் பினர்களின் கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. ஒப்பந்தத்தை டட்லி சேனநாயக்க இரகசியமாகவே பேணியதில், நாட்டைப் பிரிப்பதற்கு அவர் இணங்கி விட்டதான பிரச்சாரம் தென்னிலங்கையில் பலமாக எழுந்தது. திருகோணமலையைப் புனிதநகராக்கும் விவகாரத்தில் திருச்செல்வத்தின் நடவடிக்கையை பிர தமர் டட்லி நிராகரித்ததில், திருச்செல்வம் இராஜிநாமா செய்தார். பௌத்த பிக்குகளின் எதிர்ப்பை டட்லி இதற்கு காரணமாக சொன்னார். தமிழ் அரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகி, எதிர்க்கட்சியில் இணைந்துகொண்டது.

1970 - 77 சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில்தான், 'கடவுள்தான் இனி தமிழினத்தைக் காப் பாற்றவேண்டும்' என்ற செல்வநாயகத்தின் வேண்டுதல் ஒலித்தது. பல்கலைகழக பிரவேசத்தில் மொழிவழி தரப்படுத்தல் அமுலானது. தமிழர் அரசியலின் திருப்பமாக செல்வநாயகம் தலைமையில் ஜீ. ஜீ. பொன்னம்பலம், சௌமியமூர்த்தி தொண்டமான், சி. சுந்தரலிங்கம் ஆகியோர் ஒன்றிணைந்து, திருகோணமலையில் 1972 மே 14ஆம் திகதி தமிழர் கூட்டணி உதயமானது. 1973 செப்ரெம்பரில் தமிழ் அரசுக் கட்சியின் மல்லாகம் மாநாடு தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான தீர்மானத்தை நிறைவேற்றி, தங்களுக்கான இறைமையுள்ள ஒரு தனி அரசை அமைக்க, இலங்கையில் தமிழர்கள் தலைப் பட்டார்கள்.

தன்னுடைய இராஜிநாமாவையடுத்து இரண்டரை ஆண்டுகளின் பின்னர், 1975 பெப்ரவரி 6ஆம் திகதி நடைபெற்ற இடைத் தேர்தலில் அமோக வெற்றியை ஈட்டிய செல்வநாயகம், 'இந்தத் தேர்தல் முடிவுகளில் மக்கள் அளித்த தீர்ப்பு, ஏற்கனவே தமக்குள்ள இறைமையின் அடிப்படையில், தமிழ் மக்கள் விடுதலை பெற்று வாழவேண்டும் என்பதற்கான மக்கள் ஆணை என்றே நான் கருதுகிறேன் என்பதை, எனது மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் நான் அறிவிக்க விரும்புகிறேன்' என்று தெரிவித்தார்.

தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்று மாற்றம் பெற்று, அதன் முதல் மாநாடு வட்டுக்கோட்டையில் 1976 மே 14ஆம் திகதி நடைபெற்றது. 'ஒவ்வோர் இனத்துக்கும் உரித்தானதான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில், இந் நாட்டில் தமிழ் இனத்தின் இருப்பைப் பாதுகாப்பதற்காக சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற, சோசலிச தமிழ் ஈழ அரசை மீள நிர்மாணிப்பது தவிர்க்கவியலாததாகின்றது என்று, இம் மாநாடு தீர்மானிக்கிறது' என்ற இந்த வரலாற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தன்னுடைய மக்களின் அரசியல் உரிமைகளுக்காக எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 25 ஆண்டுகள் கால பரிபூரண விசுவாசத்துடனான பல் வேறு பிரயத்தனங்களின் நிர்ப்பந்தமான, தவிர்க்க வியலாத, தேர்ந்த தீர்மானமாக இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"ஒரு சமஷ்டி அரசமைப்புக்கான எமது கோரிக்கையை நாம் கைவிட்டுவிட்டோம். நாம் ஒன்றில் உரிமைபெற்ற இனமாக வாழவேண்டும். அல்லது, செத்து மடியவேண்டும், எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாகவிருந்தார்கள். தங்களுக்கென்றொரு நாட்டை வைத்திருந்தார்கள். எமக்கு ஒரு நாடு வேண்டும். அது, சுலபமானதல்ல என்பது எமக்கு தெரியும். எங்கள் கோரிக்கையை சிங்கள மக்கள் ஒரு நாள் ஏற்றுக்கொள்வார்கள். சாத்வீக வழியில், எமது இலக்கை நாம் அடைவோம்." - இது, பாராளுமன்றத்தில் 1976 நவம்பர் 19ஆம் திகதி அவர் ஆற்றிய கடைசி உரை.

'பார்க்கின்சன்' நோய் அவரைப் பீடித்திருந்தது. மெலிந்த தோற்றமும், நலிந்த பேச்சுமான அவரிடம் ஒரு பெரும் மந்திர சக்தி இருந்தது. அதில் எல்லோரும் கட்டுண்டார்கள். சிங்கள தலைவர்கள் பலரும் அரசியலுக்காக கத்தோலிக் கத்திலிருந்து பௌத்தத்துக்கு மாறியபோது, மதத்தால் கத்தோலிக்கரான செல்வநாயகம், அவரது இந்து, தமிழ் கலாசார வாழ்வில் எல்லோராலும் ஆகர்ஷிக்கப்பட்டார். தமிழ் கலாசார உடையுடன் நிகழ்ந்த அவரது திருமண புகைப்படம், எல்லோரையுமே ஒரு கணம் பெரு வியப்பில் ஆழ்த்தும்.

இலங்கையில் தமிழர்கள் ஒரு தனி தேசிய இனம். அவர்களுக்கென்று ஒரு பாரம்பரிய பிரதேசம் உண்டு. அதில் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை உணர்த்தி, அதில் அவர்களை விழிப்பும் உத்வேகமும் பெருமையும் கொள்ளவைத்து, அந்த இனத்தின் தந்தையாக ஒரு சகாப்தமானவர் செல்வநாயகம். தன்னுடைய 79ஆவது வயதில், 1977 ஏப்ரல் 26ஆம் திகதி அவர் மரணமுற்றார். யாழ் முற்றவெளியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருக்க அவரது பூதவுடல் தீயுடன் சங்கமித்தது. ஆர்க்காடு வீராசாமியும், நாஞ்சில் மனோகரனும் தமிழகத்திலிருந்து கலைஞர் மு. கருணாநிதி சார்பாக வந்து கலந்துகொண்டார்கள்.


தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியுடன் தந்தை செல்வாவும், அ.அமிர்தலிங்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**50**

## 2019 - 05,38

38. நீரின் வெவ்வேறு கனவளவுகள் உள்ள மூன்று ஒத்த பாத்திரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.





மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் கனவளவுகளைச் சமப்படுத்துவதற்குப் பின்பற்றத்தக்க விரைவானதும் இலகுவான-துமான நடைமுறை யாது?

1. பாத்திரம் A இலிருந்து பாத்திரம் C இற்கு நீரை இட்டு இரு பாத்திரங்களிலும் உள்ள நீர்க் கனவளவுகளைச் சமப்படுத்தல்
2. பாத்திரம் C இன் நீர்க் கனவளவுக்குச் சமமாக இருக்குமாறு A,B ஆகிய பாத்திரங்களிலிருந்து நீரை வெளியேற்றல்
3. மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரை ஒரு பெரிய பாத்திரத்தில் இட்டு மறுபடியும் A,B,C ஆகிய மூன்று பாத்திரங்களிலும் சமமாக இடுதல்.

## 2020 - 38

38. A, B ஆகிய பாத்திரங்களில் உள்ள அரிசியில் சரிபாதி வீதம் வெளியே எடுத்து அவை அப்பாத்திரங்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது பாத்திரம் A இல் உள்ள அரிசியின் அளவானது, பாத்திரம் B இல் உள்ள அரிசியின் அளவிலும்




(1) மிகக் குறைவானது.
(2) சமமானது.
(3) மிகக் கூடுதலானது.

(01) மைதானமொன்றில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் தொடர்ச்சியாக கொடிகள் நடப்பட்டிருந்தன எனின், அம்மைதானத்தில் 42வதாக நடப்பட்டிருந்த கொடியின் நிறம் யாது?
(1) சிவப்பு (2) வெள்ளை (3) மஞ்சள்

(02) ஒரு பண்ணையிலுள்ள ஓர் ஆட்டிற்கு 3 கால்கள் உள்ளன. அப் பண்ணையில் மொத்தமாக 11 ஆடுகள் உள்ளன எனின், அங்குள்ள ஆடுகளின் கால்களின் எண்ணிக்கை யாது?
(1) 30 (2) 33 (3) 43

(03) தரம் 05 இல் கற்கும் எனது தங்கையின் வயது 10 ஆகும். எனது வயது 12 ஆகும் நான் எனது 16 வயதில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் போது எனது தங்கை எத்தனையாம் தரத்தில் கற்பாள்?
(1) தரம் 10 (2) தரம் 08 (3) தரம் 09

**இந்தக் கேள்விக்கான விடைகளை 24.04.2021 ஆம் திகதி பத்திரிகையில் 48 ஆவது பகுதியில் விடைகளை பார்வையிடவும்**
**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# வல்லரசுகளின் மோதல் தளமாக துறைமுக நகர் மாற்றமடையாது

*அறுதியிட்டு கூறுகிறார் அஜித் நிவாட்*

கொழும்பு,ஏப்.26

**கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்தின் செயல்பாடுகள் உத்தேச ஆணைக்குழு சட்டமூலத்துக்கு அமைவாக செயல்படுகின்றபோது, வல்லரசு நாடுகளுக்கு இடையிலான மோதல் தளமாக ஒருபோதும் மாற்றமடையாது என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.**

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்துக்கான உத்தேச ஆணைக்குழு சட்டமூலமானது அவ்வாறே அமுலாகின்றபோது உலகளவிலுள்ள சீன எதிர்ப்பு வாத வல்லாதிக்க சக்திகள் ஓரணியில் திரண்டு அதனை எதிர்க்கும். தமது எதிரியை முதலில் தாக்குவதை விடவும், எதிரியின் (சீனாவின்) நண்பனாக இருக்கும் இலங்கையையே அதிகளவில் தாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

ஆகவே, எதிர்காலத்தில் பேராபத்துள்ளது என ஆளும்தரப்பின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில் வினவியபோதே அஜித் நிவாட் கப்ரால் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பு துறைமுக நகரின் நிலப் பரப்பு இலங்கைக்கே உரித்தானது. அது பற்றிய கவலைகள் தேவையற்றவை. ஆரம்பத்தில் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இருந்த துறைமுக நகரின் உரித்து பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் 2014இல் ஒப்படைக்கப்பட்டது.

அதனையடுத்து தற்போது அந்தத் துறைமுக நகரின் அதிகாரத்தை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படுவதே நோக்கமாகும். இதனால், நிலஉரித்து பறிபோகாது. அது இலங்கையிடமே இருக்கும்.

மேலும், இந்தத் துறைமுக நகரானது



சீனாவின் முதலீடுகளுக்காக மட்டும் வழங்கப்படமாட்டாது. இங்கு சீனாவை விடவும் ஏனைய நாடுகளும் வருகை தந்து முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஆகவே, எந்தவொரு நாட்டுக்கும் துறைமுக நகரத்தில் முதலீடுகளைச் செய்ய முடியும்.

அவ்வாறான நிலையில், வல்லரசுகள் எவ்வாறு மோதல்களில் ஈடுபட முடியும்.

இதேவேளை, நாட்டின் தற்போதைய வளர்ச்சி வீதம் 2 சதவீதமாகக் காணப்படுகின்றது. இந்த வளர்ச்சி வீதத்துடன் தொடர்ந்து பயணிக்க முடியாது. ஆகவே, துறைமுக நகரின் ஊடாக 15 பில்லியன் டொலர்கள் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். அதற்கு அனைத்து நாடுகளும் முதலீடுகளைச் செய்வதற்கு கவர்ச்சியான வரிச்சலுகைகளை வழங்கவுள்ளோம். அதற்காகவே ஆணைக்குழு சட்டமூலத்தை தயாரித்துள்ளோம்- என்றார். (எ)

## சுகாதார வழிகாட்டலை மீறிய 3,470 பேர் இதுவரையில் கைது!

கொழும்பு,ஏப்.26

முகக்கவசம் அணியாமை மற்றும் தனிமைப் படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 19 பேர் கைதுசெய்யப்பட்டனர்.



இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கிரிபத்கொடை மற்றும் பிலியந்தலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும்,

இந்த நடவடிக்கைக் காக கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 3,470 பேர் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (எ)

## வீதி விபத்துக்களால் மேலும் 8 பேர் பலி!

கொழும்பு,ஏப்.26

நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் வீதி விபத்துக்களால் எட்டுப் பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஆறு பேர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தனர். ஏனைய இருவர் அதற்கு முன்னர் இடம்பெற்ற விபத்துக்களில் சிக்கி காயமடைந் தவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

மோட்டார் சைக்கிள் சாரதிகள் ஐவர், பாதசாரதி ஒருவர், ஓட்டோ பயணியொருவர் மற்றும் லொறி உதவியாளர்ஒருவருமேஇவ்வாறு உயிரிழந்தனர் எனத் தெரிவித்தார். (எ)

# தானசாலை, பந்தல்கள் அமைப்பதை தவிர்க்குமாறு மக்களிடம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.26

வெசாக் காலப்பகுதியில் பாரிய கூட்டங்களை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்படும் தானசாலைகள் மற்றும் பந்தல்கள் ஏற்பாடு செய்வதை தவிர்க்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம், பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய கொரோனா நிலைமைகள் காரணமாக இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது என சங்கத்தின் பொதுச் செயலாளர் உபுல் ரோஹண கூறினார்.

அத்துடன் வடமத்திய மாகாணத்தை நோக்கிய யாத்திரைப் பயணங்களைத் தவிர்க்குமாறும், சுகாதார அதிகாரிகளுக்கு ஒத்துழைத்து செயல்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு சாத்தியமில்லை

## கோட்டாபய அரசாங்கமும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டது என்கிறார் விஜயதாஸ

கொழும்பு ஏப்.26

**தற்போதைய அரசியல் சூழமைவுகளின் பிரகாரம் புதிய அரசமைப்பு உருவாவதற்கு சாத்தியமில்லை என்று ஆளும் தரப்பின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கமும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து நிறைவேற்றிக்கொண்டது. இதன்மூலம் ஜனாதிபதி இழந்த அதிகாரங்களை மீளப்பெற்றுக் கொண்டார்.

20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் புதிய அரசமைப்பையும் ஓரிரு மாதங்களுக்குள்ளே நிறைவேற்றிவிட வேண்டும் என்று நான் ஆலோசனை வழங்கியிருந் தேன். ஆனால், ஆட்சியாளர்கள் அதில் அக்கறை காட்டியிருக்கவில்லை.

தற்போது ஆளும் தரப்பில் பல்வேறு பிளவுகள் ஏற்பட்டுள்ளன. துண்டுகளாக இயங்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் புதிய அரசமைப்பை உருவாக்க முடியும் என்று நான் நம்பவில்லை.

வெறும் 44 உறுப்பினர்களைக் கொண்டு ஆளும் தரப்பு காணப்படும்போதே 19ஆவது திருத்தச்சட்டத்தை சமர்ப்பித்த நான் 215பேரின் ஆதரவைப் பெற்று அதனை நிறைவேற்றியிருந்தேன்.



தற்போதைய அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கையில் வைத்துக் கொண்டும் புதிய அரசமைப்புக்கான பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முனைந்திருக்கவில்லை- என்றார். அதேபோன்று மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் முறை மையில் மாற்றம் ஏற்படுத்தப் படுமா? என்று வினவியபோது, கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு உத்தேச சட்ட மூலம் பாராளுமன்றில் சமர்ப் பிக்கும் வரையில் அவ்விதமான ஒரு விடயம் நடைபெறுகின் றது என்று ஆளும் தரப்பு உறுப்பினர்களான எமக்குத் தெரியப் படுத்தப்படாதே இருந்தது.

இவ்வாறு தான் ஆளும் கட்சி உறுப்பினர்கள் நடத்தப்படுகின்றனர். ஆகவே, தேர்தல் முறைமை தொடர்பில் என்ன செய்யப்போகின்றார்கள் என்று கூற முடியாதுள்ளது- என்றார். (எ)

# துப்பாக்கிகளுடன் நான்கு பேர் கைது

கொழும்பு,ஏப்.26

குருவிட்ட, அவிசாவளை பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விஷேட சோதனை நடவடிக்கையின்போது உள்நாடு மற்றும் வெளிநாட்டுத் துப்பாக்கிகளுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

இரத்தினபுரி - குருவிட்ட பகுதியில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குழல்12 ரக துப்பாக்கியுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேகத்துக்கிடமான ஓட்டோவை அவதானித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அதிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட குழல் 12 ரக துப்பாக்கி ஒன்றையும், அதன் இரு தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

இரத்தினபுரி, குருவிட்ட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 37, 42,49 ஆகிய வயதுடைய மூன்று பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹேவாயின்ன பகுதியில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின்போது உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார். (எ)

# தேர்தலை பிற்போடும் தேவை அரசாங்கத்துக்கு இல்லையாம்

## சாகர காரியவசம் தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.26

மாகாண சபைத் தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெறவுள்ள தனிப்பட்ட பேச்சின்போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும்.

ஆளும் கட்சிக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்குப் பேச்சுவார்த் தையின் மூலம் மாத்திரம் தீர்வு காண முடியும் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மே தினக் கூட்டங்கள், பேரணிகள் தடை செய்யப்படவில்லை.

பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. சுகாதாரத் தரப்பினரது தீர்மானங்களுக்கு அமையவே மே தினக் கூட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டன என்பதை எதிர்த் தரப்பினர் புரிந்துகொள்ள வேண் டும்.

பொது மக்களை ஒன்று கூட்டாத வகையில் தொழில்நுட்ப வசதிகள் ஊடாக மே தின நிகழ்வுகளை பொதுஜன பெரமுன கட்சி மட்டத்தில் முன்னெடுக்க பொதுஜன பெரமுனவின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கும், சிறி லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் கருத்து வேறுப்பாடுகள் காணப்படுகின்றன.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தரப்பினரும் கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டும். கூட்டணிக் கொள் கைக்கு முரணாகப் பங்காளிக் கட்சியின் ஒரு சிலர் கடந்த காலங்களில் செயல்பட்டு தேவையில்லா பிரச்னைகளைத் தோற்றுவித்துள்ளனர்.

கூட்டணியில் காணப்படும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், பங்காளிக் கட்சியின் தலைவர்களுக்கும் இடையிலான பேச்சு கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தைக்கு கூட்டணியின் 10 பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. பிரதமருடன் தனிப் பட்ட முறையில் பேச்சியில் ஈடுபட அனுமதி கோரியுள்ளார்கள். அனைத்துப் பிரச்னைகளுக்கும் பேச்சுவார்த்தை ஊடாக மாத்திரம் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

மாகாண சபை தேர்தலைப் பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் தொடர்பில் பல மாறுபட்ட யோசனைகள் இதுவரை முன்வைக்கப்பட்டுள்ளன. பங்கா ளிக் கட்சித் தலைவர்களுக்கும், பிரதமருக்கும் இடையில் இடம் பெறவுள்ள பேச்சுவார்த்தையின் போது மாகாண சபைத் தேர்தல் குறித்து உறுதியான தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்- என்றார். (எ)

# மாகாண சபை தேர்தல் இவ்வருடம் இடம்பெறாது

## திஸ்ஸ விதாரண விரக்தி

கொழும்பு,ஏப்.26



மாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் நடத்தவதற்கான சாத்தியம் கிடையாது. தேர்தல் முறைமை குறித்து பிரதான கட்சிகளின் ஆலோசனைகளை மாத்திரம் கோராமல் சிறு கட்சிகளின் ஆலோசனைகளையும் கோருவது அவசியமானது.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த லங்கா சம சமாஜ கட்சி முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என அந்தக் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. தேர்தலை விரைவாக நடத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் வெற்றிபெறாத அளவுக்கு பல பிரச்னைகள் ஏதாவதொரு வழியில் தோற்றம் பெறுகிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து இப்பிரச்னைக்குத் தீர்வுகாண எதிர்பார்த்தோம். அதுவும் வெற்றிபெறவில்லை எனத் தெரிவித்தார். (எ)

# ஸ்புட்னிக் – 5 தடுப்பூசிகள் இறக்குமதி சில நாள்களில்

கொழும்பு,ஏப்.26

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஸ்புட்னிக் - 5 கொரோனா தடுப்பூசிகளின் பங்கு இன்னும் சில நாள்களில் இலங்கைக்கு வரும் என்று ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் - 5 தடுப்பூசிகளை இலங்கையில் அவசர பயன்பாட்டுக்காக உபயோகிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய 7 மில்லியன் தடுப்பூசிகளை 69.65 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் முதல்கட்டமாக கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை தொடர்பில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளது என நிலைமையைக் கட்டுப்படுத்த அனைத்து வளங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலைகளை நிறுத்துங்கள்

## மியன்மார் இராணுவ ஆட்சியாளரிடம் ஆசியான் அமைப்பு நேரில் வலியுறுத்து

ஜகார்த்தா, ஏப். 26

மியன்மாரில் ஜனநாயக ஆதரவு போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவதை நிறுத்தவும் ஆங் சான் சூகி உள்ளிட்ட அரசியல் கைதிகளை விடுவிக்கவும் அந்த நாட்டு இராணுவ ஆட்சியாளர் மின் ஆங் லயிங்கிடம் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் (ஆசியான்) தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தவை வருமாறு:

ஆசியான் உறுப்பு நாடுகளின் மாநாடு இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், மியான்மரின் இராணுவ ஆட்சியாளரான அந்த நாட்டின் தலைமைத் தளபதி மின் ஆங் லயிங் பங்கேற்றார். ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு சர்வதேச நிகழ்ச்சியில் அவர் பங்கேற்பது இதுவே முதல் தடவையாகும்.

மாநாட்டில் பேசிய இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ, இராணுவ ஆட்சிக்கு எதிராக மியன்மாரில் போராட்டத்தில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி, அவர்களைப் படுகொலை செய்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று லயிங்கிடம் வலியுறுத்தினார்.



ஆசியான் மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜகார்த்தா நகருக்கு சனிக்கிழமை வந்த மியான்மர் இராணுவ ஆட்சியாளர் மின் ஆங் லயிங்.

மேலும், அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஜனநாயக ஆட்சியை கவிழ்த்து இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இதற்கு எதிராக தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுவோர் மீது இராணுவம் துப்பாக்கி சூடு நடத்துவதுடன், அவர்களை கைது செய்து சித்திரவதைகளுக்கும் உட்படுத்தி வருகின்றது. இதுவரை அந்நாட்டில் 700இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடும் அமைப்பு கூறியுள்ளது. (ஐ)



# ஜெருசலேம் – காசா எல்லையில் கவனவீர்ப்பு போராட்டங்கள்!

ஜெருசலேம், ஏப். 26

காசாவிலிருந்து இஸ்ரேல் நோக்கி 36 ஏவுகணைத் தாக்குதல்கள் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டன. இநநிலையில், ஜெருசலேம் மற்றும் காசா எல்லையில் புதிய ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

இஸ்ரேலுக்கும் காசா பகுதிக்கும் இடையில் மூடப்பட்ட கர்னி கிராசிங் அருகே 700 பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜெருசலேமில் வாழும் பலஸ்தீனியர்களுக்கு ஆதரவை வெளிப்படுத்த ஆயிரக்கணக்கான காசா மக்கள் வீதிகளில் இறங்கினர். அத்துடன், காசா பகுதி முழுவதும் வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. காசாவின் பல்வேறு பகுதிகளில் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் புகைப்படங்களும் காணொலிகளும் சமூக ஊடகங்களில் தற்சமயம் பகிரப்பட்டுள்ளன.

மேற்குக் கரை முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அங்கு, மக்கள் இஸ்ரேலிய சோதனை சாவடிகளுக்கு அணிவகுத்து சென்றனர்.

இதற்கிடையில், பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலிய பொலிஸாருக்கும் இடையில் ஒரு புதிய தொடர் வன்முறைகள் ஜெருசலேமின் பழைய நகரத்திற்கு வெளியே உள்ள டமாஸ்கஸ் வாயிலில் தொடங்கப்பட்டுள்ளன.

வாயிலில் ஏற்பட்ட மோதல்களில் ஆறு பலஸ்தீனியர்கள் காயமடைந்தனர். கிழக்கு ஜெருசலேமில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

இஸ்ரேல் - பலஸ்தீனர்களிடையே பதற்றங்களின் எழுச்சி புனித ரமழான் மாதத்தின் மத்தியில் நடைபெறுகிறது மற்றும் உள்ளூார் ஊடகங்களில் வெளியான யூதர்கள் மற்றும் அரேபியர்களுக்கு எதிரான சமீபத்திய தாக்குதல்களால் தூண்டப்பட்டுள்ளது.

அதேநேரம் பலஸ்தீனியர்கள் 15 ஆண்டுகளில் தங்கள் முதல் பொதுத் தேர்தலுக்கு தயாராகி வருகின்றனர். மேற்குக் கரை மற்றும் காசா பகுதி இரண்டிலும் பாராளுமன்றத் தேர்தல் மே 22 ஆம் திகதியும், ஜனாதிபதித் தேர்தல் ஜூலை 31 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.




# இந்தோனேசியாவில் காணாமல்போன நீர்மூழ்கியின் பாகங்கள் கண்டுபிடிப்பு!

## 53 பேரை தேடும் பணி நிறுத்தம்!!

பாலி, ஏப். 26

இந்தோனேசியாவில் 53 பேருடன் காணாமல் போன நீர்மூழ்கிக் கப்பலின் பாகங்களை அந்நாட்டு கடற்படை கண்டுபிடித்துள்ளது.

நீர் மூழ்கிக் கப்பல் காணாமல் போனதாகக் கூறப்படும் இடத்திற்கு அருகில் அதன் பாகங்கள், பிராரத்தனை பாய்கள் உள்ளிட்டவை சிதறல்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. சுமார் 2,800 அடி ஆழத்தில் விசேட ஸ்கான் கருவி மூலம் இவை கண்டறியப்பட்டன என்று இந்தோனேசிய கடற்படை தெரிவித்தது.

மேலும், 72 மணி நேரத்துக்குப் போதுமான ஒட்சிசனையே அந்தக் கப்பல் கொண்டிருந்தது. சனிக்கிழமையுடன் அதுவும் தீர்ந்து போயிருக்கும். கப்பலில் இருந்தவர்கள் உயிர் வாழக்கூடிய எல்லையை கடந்து விட்டனர். என்றும். இதனால், கப்பலில் இருந்தவர்களை தேடும் பணிகள் நிறுத்தப்பட்டன என்று நேற்று செய்தியாளர்களை சந்தித்த கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)

# ரஷ்யாவுடன் இணைந்து செயல்பட அமெரிக்கா தயாராகவே உள்ளது!

## ஜோ பைடன் அறிவிப்பு




வாஷிங்டன், ஏப். 26

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் ரஷ்யாவுடன் இணைந்து செயல்படத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர்ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அவர் தலைமையில் நடைபெற்ற சர்வதேச மெய்நிகர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும், பருவநிலை மாற்றப் பிரச்னைக்கு எதிரான போரில், கரியமில வெளியேற்றம் போன்ற புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்குவதில் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் செயல்பட விரும்புவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

அவரின் இந்தக் கருத்து மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. இந்த விவகாரத்தில் ரஷ்யாவுடன் இணைந்து செயல்பட தயாராக இருக்கிறோம் என்றார்அவர். முன்னதாக, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பருவநிலை மெய்நிகர் மாநாட்டில் பங்கேற்ற விளாடிமிர் புடின், உலகுக்கு மிகப் பெரிய சவாலாகத் திகழும் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள சர்வதேச நாடுகள் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பூமி குளிரில் உறையாமல் வெப்பமாக வைத்திருக்க உதவும் கரியமில வாயு உள்ளிட்ட பசுமைக்குடில் வாயுக்களின் விகிதம், தொழில்புரட்சி காரணமாக வளிமண்டலத்தில் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக புவியின் வெப்பம் அதிகரித்து, வறட்சி, அனல் காற்று, காட்டுத் தீ, பனிப் பாறைகள் உருகி கடல் மட்டம் அதிகரித்தல், புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன.

“பருவநிலை மாற்றம்“ என்றழைக்கப்படும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாடுகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 2015-ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டன. அதன் அடிப்படையில், புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை சர்வதேச நாடுகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையில் சுமார் 40 நாடுகள் பங்கேற்ற 2 நாள் சர்வதேச பருவநிலை மாநாடு வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஒட்சிசன் சிலிண்டர் வெடித்து தீ விபத்து ஈராக் மருத்துவமனையில் 27 பேர் பலி!

பாக்தாத், ஏப். 26

ஈராக் மருத்துவமனை ஒன்றின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒட்சிசன் சிலிண்டர் வெடித்து சிதறி தீ பற்றியதில் அங்கு சிகிச்சை பெற்ற 27 கொரோனா நோயாளர்கள் தீயில் கருகி உயிரிழந்தனர்.

அத்துடன், 46 பேர் பலத்த மற்றும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். அங்கு சிகிச்சை பெற்று வந்த 90 பேர் மீட்கப்பட்டு வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே தியாலா பிரிட்ஜ் என்ற இடத்திலுள்ள இப்னுகாதிப் மருத்துவமனையில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பாதிக்கப்படாதவர்கள் என அனைத்து நோயாளிகளும் மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

ஈராக் மீது பல தசாப்தங்களாக விதிக்கப்பட்டுள்ள சர்வதேச பொருளாதாக தடை, போர் மற்றும் புறக்கணிப்புக்களால் அந்நாட்டு சுகாதாரத் துறை ஏற்கனவே சீர்குலைந்துள்ளது. கொரோனா தொற்று நோய் நெருக்கடியால் சுகாதாரத் துறை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் இதுவரை 10 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 15 ஆயிரத்து 271 கொரோனா மரணங்களும் அங்கு பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3ஆவது அலையை சமாளிக்க தென்கொரியா ஆதரவளிப்பு!

## *அமைச்சர் பவித்ரா தூதுவருடன் பேச்சு*

*கொழும்பு, ஏப். 26*

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றைச் சமாளிப்பதில் தென்கொரிய சுகாதாரத் துறையின் ஆதரவு குறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி மற்றும் இலங்கைக்கான கொரிய குடியரசின் தூதுவர் வூன்ஜின் ஜியோங் ஆகியோருக்கு இடையே கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, கொரோனாத் தொற்றுநோயைக் கையாள்வதில் தென் கொரிய அரசு பயன்படுத்திய வழிமுறைகள் மற்றும் இலங்கையிலும் கொரோனா பரவுவதைக் குறைப்பதில் தென்கொரியாவின் அணுகுமுறையை எவ்வாறு கையாளலாம் என்பது குறித்து தூதர் சுகாதார அமைச்சருக்கு விளக்கி கூறினார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு குறித்து கொரிய அரசு இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பாராட்டுகளை தெரிவித்த அமைச்சர், இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசு சார்பாக நன்றியையும் தூதுவருக்குத் தெரிவித்தார். (ஐ)

# தமிழ் அரசு கட்சி கட்டமைப்பில் அமைப்பாளர் பதவியே இல்லை!

## *நல்லூர் தொகுதி தலைவர் சீ.வீ.கே.*

*யாழ்ப்பாணம், ஏப். 26*

தமிழ் அரசுக் கட்சியின் கட்டமைப்பில் அமைப்பாளர் என்ற பதவி இல்லை. நல்லூர் கிளைக்கு அவ்வாறு ஒருவர் நியமிக்கப்படவும் இல்லை என்று நல்லூர் தொகுதியின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையில்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர் தொகுதிக் கிளையின் கூட்டம் சனிக்கிழமை அதன் பணிமனையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர் தொகுதி அமைப்பாளர் எனத் தம்மை அடையாளப்படுத்தி ஒருவர் தமது முகநூலில் பதிவிட்டிருப்பது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அமைப்பு விதிகளின் படி அதன் எந்தக் கட்டமைப்பிலும் அமைப்பாளர் என்ற பதவி இல்லை என்பதும் இந்தச் செயல் தன்னிச்சையான, தான் தோன்றித்தனமான, தவறான முன்னெடுப்பாகும் என்பதும் கூட்டத்தில் பங்குபற்றியோரால் ஒருமனதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தவறான செயல்பாட்டை சுட்டிக்காட்டி ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்படல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது - என்றுள்ளது. (ஐ)

# ரிஷாத் பதியுதீன் எம்.பி. கைது திட்டமிட்ட அடிப்படையிலானது

## *மக்கள் காங்கிரஸ் கடும் எதிர்ப்பு*

**கொழும்பு,ஏப்.26**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடனோ அதன் சூத்திரதாரிகள் மற்றும் தற்கொலைதாரிகளுடனோ முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பொறுப்புடன்கூறு வதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.**



கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற போது, கட்சியின் தவிசாளர் சட்டத்தரணி அமீர் அலி, சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.சஹீட், பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப், செயலாளர் சுபைர்தீன், சட்ட விவகாரப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான பாயிஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இதன்போது, கட்சியின் தவிசாளர் அமீர் அலி கருத்துத் தெரிவிக்கையில்:

அநீதியான முறையில் இந்தக் கைது இடம்பெற்றிருக்கின்றது. ஜனநாயக முறைப்படி பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஒரு கட்சியின் தலைவராக இருக்கும் ரிஷாத் பதியுதீன், இந்த நாட்டின் சிறுபான்மை சமூகம் ஒன்றின் தலைவராகவும் விளங்குகின்றார். அவர் இவ்வாறு அருவருப்பாகவும் அசிங்கமாகவும் கைது செய்யப்பட்டிருப்பது ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்குகின்றது.

பொதுவாக இந்த விவகாரத்திலே முக்கியமான விடயம் ஒன்றை நாட்டு மக்களுக்கு தெரிவிப்பேன் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் தெளிவாகக் கூறினார்.

நாட்டிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் அவரின் வார்த்தையை எதிர்பார்த்திருந்தோம். இந்த நாட்டிலே அரசியல் தேவைப்பாட்டுக்காக, இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக அவர் தெளிவாகக் கூறினார். இந்தத் தாக்குதலின் பின்னணியுள்ள சூத்திரதாரிகள் யார்? என்பதையும், இந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது? என்பதையும் வெளிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு கர்தினாலுக்கு எவ்வாறு இருக்கின்றதோ, முஸ்லிம் சமூகத்துக்கும் அவ்வாறான தேவைப்பாடு இருக்கின்றது. இந்த நிலையில், கர்தினாலை திருப்திப்படுத்துவதற்காக எமது தலைவர் கைது செய்யப்பட்டாரா? என்றும் எண்ணத் தோன்றுகிறது.

தலைவர் ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன், சுமார் ஐந்தரை மாதங்களின் பின்னர், தடுப்புக்காவலில் இருந்து சி.ஐ.டி யினரால் விடுவிக்கப்பட்ட போது, ஏதாவது டீல் இருக்கின்றதா? என்றும் கர்தினால் கேட்டார்.

ஆனால், அரசாங்கத்துக்கும் எமது கட்சிக்கும் இடையில் எந்த டீலும் இல்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றோம். எமது தலைவரின் கைது சட்ட விரோதமானது. ஜனநாயகத்துக்கு விரோதமானது. இந்தக் காட்டுமிராண்டித் தனமான அரசியல் சித்தாந்தம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற பிரார்த்தனையையே எமது கட்சி அபிமானிகள் இந்த புனித ரமழானில் இறைவனிடம் கேட்க வேண்டும், அதேபோன்று இதே பிரார்த்தனையை இந்த நாட்டு முஸ்லிம்களும் கேட்க வேண்டும்- என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் கருத்து தெரிவித்த போது:

எமது தலைவர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்ட முறைமைகள் சரியான விதத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அறிக்கையில் கூறப்பட்டவாறு இதுவரை எந்தவொரு நபருக்கும் எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் ஆரம்பிக்கப்படாத நிலையில் ரிஷாத் பதியுதீன் மாத்திரம் அறிக்கையில் கூறப்பட்டமைக்கு மாற்றமாக கைது செய்யப்பட்டுள்ளார். இது அரசியல் நோக்கம் கொண்டதான கைது என அப்பட்டமாகத் தெரிகின்றது.

அவர் திட்டமிட்ட அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் ரிஷாத் பதியுதீனோ அல்லது வேறு எந்த முஸ்லிமோ அல்ல என பாராளுமன்ற விவாதங்களிலிருந்து துலாம்பரமாக தெரிகின்றது. சூத்திரதாரி வேறு யாரோ என்பதுவும் எல்லோருக்கும் தெரியும். இது சிங்கள சமூகமும் இதை உணரத் தொடங்கியுள்ளது. ரிஷாத் பதியுதீன் மீது எத்தனையோ குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, எல்லாமே புஸ்வாணம் ஆகிவிட்ட நிலையில் இப்போது காரணமில்லாமல் கைது செய்யப்பட்டுள்ளார் என அவர் தெரிவித்தார். (எ)





வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது. படங்கள் - ஐ. சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை மீள முடக்கும் முடிவுக்கு செல்வது பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பாகும்

## ஜனாதிபதி கோட்டாபய விளக்கம்

கொழும்பு,ஏப்.26

**கொரோனா பிரச்னைக்குத் தீர்வாக சில காலம் நாட்டை மூடி வைக்க வேண்டும் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆரம்ப காலகட்டங்களில் அத்தகைய நடைமுறையின் மூலம் திருப்தியான பெறுபேறு கிடைக்கப்பெற்றபோதும் நீண்டகாலத்தில் அது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். பொருளாதார செயல்பாடுகளை முற்றாக முடக்கிவிடக்கூடிய வகையில் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிப்பது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு செய்ய முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



கொரோனா வைரஸ் தொற்று நோய்ப் பிரச்னைக்கு இறுதித் தீர்வு தடுப்பூசி மாட்டுமே என்றும், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது மக்களின் பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

கொரோனா நோய்த் தொற்றுப் பிரச்னைக்கு இறுதித் தீர்வு தடுப்பூசி மட்டுமேயாகும். மக்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்று அரசாங்கத்திடம் உள்ளது. இந்தச் சவாலை சிறப்பாக வெற்றிகொள்வதற்கு கொரோனா நோய்த் தொற்று முதல் சுற்றின்போது செய்ததைப் போன்று சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்துள்ள அனைத்து சட்டதிட்டங்கள், வழிகாட்டல்களை மக்கள் முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது அங்கீகரித்துள்ள மற்றும் எதிர்காலத்தில் அங்கீகாரம் வழங்கவுள்ள கொரோனா ஒழிப்பு தடுப்பூசிகளில் நான்கு தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை செய்துள்ளது. முதலில் கொண்டுவரப்பட்ட அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி 925,242 பேருக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசியின் இரண்டாவது கட்டம் மே மாதம் முதலாம் வாரத்தில் வழங்கப்படவுள்ளது. முன்னணி சுகாதார அதிகாரிகள், கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 356,000 பேருக்கு இரண்டாவது கட்டம் வழங்கப்படும்.

எஞ்சிய தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்கு அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி உற்பத்தி செய்யும் உலகிலுள்ள ஏனைய நிறுவனங்களுடன் அரசாங்கம் தற்போது கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது.

ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகள் 200,000 ஏப்ரல் மாதம் இறுதியிலும் 400,000 தடுப்பூசிகள் மே மாதத்திலும், 800,000 தடுப்பூசிகள் ஜூன் மாதத்திலும் 1,200,000 தடுப்பூசிகள் ஜூலை மாதத்திலும் கொண்டு வரப்படும். 13 மில்லியன் ஸ்புட்னிக் - வி தடுப்பூசிகளை கொண்டு வருவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அன்பளிப்பாக சீனாவிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள 600,000 சினோபார்ம் தடுப்பூசிகள் எதிர்வரும் சில வாரங்களில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் நாட்டு மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அரச ஔடத கூட்டுத்தாபனம் பைசர் தடுப்பூசியை கொண்டு வருவதற்கு தேவையான ஆரம்ப உடன்படிக்கைகளில் தற்போது கைச்சாத்திட்டுள்ளதுடன், அவற்றை மிக விரைவில் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கொரோனா நோய்த் தொற்றை ஒழிப்பதில் முக்கிய இடம் வகிப்பது மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதாகும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ஜெனிவாவில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

உரிய முறையில் முகக்கவசங்களை அணிவது, சவர்க்காரம் அல்லது தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல், தேவையற்ற பயணங்கள் மற்றும் விழாக்கள் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து இருப்பது இவற்றில் முக்கியமானதாகும்.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது, ஒழுக்கப்பண்பாடான சமூக நடத்தைகள், வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு சிறந்த தீர்வாகும் என்பது அநேக நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமான அனுபவமாகும்.

கொரோனா பிரச்னைக்குத் தீர்வாக சில காலம் நாட்டை மூடி வைக்க வேண்டும் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆரம்ப காலகட்டங்களில் அத்தகைய நடைமுறையின் மூலம் திருப்தியான பெறுபேறு கிடைக்கப்பெற்றபோதும் நீண்டகாலத்தில் அது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், பொருளாதாரத்துக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். பொருளாதார செயல்பாடுகளை முற்றாக முடக்கிவிடக்கூடிய வகையில் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிப்பது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு செய்ய முடியாது. எமது நாட்டின் வருமானம் ஈட்டும் பெரும்பான்மையானவர்கள் ஒழுங்குபடுத்தப் படாத வாழ்வாதார வழிகளில் தங்கியுள்ளனர்.

எனவே அரசாங்கம் தனது பணிகளை மேற்கொண்டு வருவதுடன், மக்களும் நாட்டினதும் தம்முடையதும் நலனைக் கருத்தில்கொண்டு தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

---

### ஈஸ்டர் தாக்குதல் குறித்து

## கருத்து தெரிவிப்போரிடம் அறிக்கை பெறப்படுமாம்

கொழும்பு,ஏப்.26



உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் குறித்த விசாரணை பற்றி பல்வேறு இடங்களில் கருத்துக்களை தெரிவிப்போரிடமும் அறிக்கைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

குற்றவியல் சட்டக்கோவை 110 ஆவது சரத்துக்கு அமைய பொலிஸாருக்கு இந்த அதிகாரம் இருப்பதாகவும் அவர் கூறினார். உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற விஷேட ஊடகச் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

2017, 2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தீவிரவாத சம்பவங்கள் தொடர்பிலும் நாம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம். இதுதொடர்பில் இதுவரையில் சந்தேகத்தின் பேரில் 697 கைது செய்யப்பட்டனர்.

இவர்களுள் 83 பேர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பில் குற்றச்செயல் தடுப்புப் பிரிவு பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் மத்தியில் பல்வேறு நபர்கள் இருக்கின்றனர். விஷேடமாக முக்கிய கொலையாளியான சஹ்ரான் ஹாசிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவின் தந்தை உள்ளிட்டோரும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

---

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் கைது

### கஜேந்திரகுமார் எம்.பி. கடும் கண்டனம்

கொழும்பு,ஏப்.26

சர்வதேச அளவில் கண்டிக்கப்பட்ட மிகவும் ஆபத்தான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடுமையாகக் கண்டிக்கின்றது என அந்தக் கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்:

இந்தக் கைது இடம்பெற்ற விதம் - பொலிஸ் ஆட்சியிலுள்ள கட்சியின் ஒரு பகுதியாக இயங்கும் நாட்டில் இடம்பெறும் அரசியல் நோக்கத்தின் அடிப்படையிலான கைதுகளை போன்றே இது இடம்பெற்றது என்பதை வெளிப்படுத்தும் அனைத்து வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி என்ற அடிப்படையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீதி ஒருபோதும் வழங்கப்படாது என்பதை தயக்கமின்றி தெரிவிக்க முடியும்.

மாறாக நாடு அநீதியின் பாரம்பரியங்களுடன் விடப்படும். பயங்கரவாத தடைச்



சட்டத்தின் கீழான கைதுகள் மற்றும் நீதி நடவடிக்கைகள் குறித்த அனுபவங்கள், ஆதாரங்கள் அற்ற நபர்களைத் தண்டிப்பதற்கான கருவியாக அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜடேஜா மிரட்டல் ஆட்டம்: சென்னை அணி அபார வெற்றி!

மும்பை, ஏப். 26

ஜடேஜா இறுதிநேரத்தில் 5 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி என 34 ஓட்டங்களை விளாச, 20ஆவது ஓவரில் 37 ஓட்டங்களை குவித்தது சென்னை. இதனால், பெங்களூர் அணியை 69 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்று நடந்த போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் - பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

மும்பையில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

கெய்வாட் - டூ பிளசிஸ் இணை தொடக்கம் கொடுத்தது. சிறப்பான அடித்தளத்தை இந்த இணை இட்டது. 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களை எடுத்து கெய்க்வாட் ஆட்டமிழந்தார்.

டூ பிளசிஸுடன் இணைந்த சுரேஷ் ரெய்னா 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி என அதிரடியாக ஆடி 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ராயுடு களம் புகுந்த நிலையில், 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 50 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ராயுடுவும் ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் மிரட்டி 14 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து வந்த ரவீந்திர ஜடேஜா முதலில் பொறுமையாக ஆடினார். இறுதி ஓவரில் அதிரடியில் மிரட்டிய அவர் 5 சிக்ஸர்களையும் ஒரு பௌண்ட்ரியையும் பறக்கவிட்டு 34 ஓட்டங்களை எடுத்தார். அந்த ஓவரில் மட்டும் சென்னை அணி 37 ஓட்டங்களை குவித்தது.

20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 191 ஓட்டங்களை குவித்தது சென்னை அணி.

இதில், ஜடேஜா 5 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரியுடன் 28 பந்துகளில் 62 ஓட்டங்களுடனும், டோனி 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பெங்களூரின் பந்துவீச்சில் ஹர்சல் பட்டேல் 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுதாடிய பெங்களூருக்கு பந்துவீச்சிலும் சிம்மசொப்பனமாக அமைந்தார் ஜடேஜா.

தொடக்கம் கொடுத்த விராட் கோலி 8 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். 2 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகள் என விளாசி 34 ஓட்டங்களை குவித்த தேவ்தத் படிக்கலும் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்தவர்களில் மக்ஸ்வெல் 22, ஜமைசன் 16 ஓட்டங்களை எடுத்தனர். ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை படை ஓட்டத்தை எட்டவில்லை. இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்த பெங்களூர் 122 ஓட்டங்களையே எடுத்தது.

சென்னையின் சார்பில் பந்துவீசி அசத்திய ஜடேஜா 3, இம்ரான் தாஹீர் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

62 ஓட்டங்களையும் குவித்து, ரன் அவுட் ஒன்றையும் செய்து, பந்துவீச்சில் 3 விக்கெட்களையும் கைப்பற்றிய ஜடேஜா ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஐ)





# சுப்பர் ஓவரில் ஹைதராபாத்தை வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்ஸ்!

சென்னை, ஏப். 26

ஹைதராபாத் அணியை சுப்பர் ஓவரில் வென்று சாதித்தது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்றிரவு நடந்த போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ், ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணிகள் மோதின.

சென்னையில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி கப்பிட்டல்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

பிரித்வி ஷா, தவான் இணை தொடக்கம் கொடுத்தது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த இணை 81 ஓட்டங்களை முதல் விக்கெட்டுக்காக இணைப்பாட்டமாகப் பெற்றது.

3 பௌண்ட்ரிகளுடன் 28 ஓட்டங்களைப் பெற்று ரஷீத் கானின் பந்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் அரைச்சதம் (53 ஓட்டங்கள்) கடந்த பிரித்வி ஷாவும் ஆட்டமிழந்தார்.

பின்னதாக வந்த ரிஷப் பந்த் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 37 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அவருடன் இணைந்த ஸ்ரீவன் ஸ்மித் அதிரடியில் கலக்கினார்.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்களைப் பெற்றது டில்லி அணி.

ஸ்ரீவன் ஸ்மித் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 34 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார்.

ஹைதராபாத்தின் பந்துவீச்சில் சித்தார்த் கவுல் 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத்துக்கு டேவிட் வோர்ணர், ஜொன்னி பெயர்ஸ்ரோ தொடக்கம் கொடுத்தனர். 6 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார் வோர்ணர்.

அவரைத் தொடர்ந்து பெயர்ஸ்ரோவுடன் இணைந்த கேன் வில்லியம்ஸன் அதிரடி காட்டினார். இந்நிலையில் 3 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை பறக்கவிட்ட பெயர்ஸ்ரோ 18 பந்துகளில் 38 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அவரின் பின் வந்த வீரர்கள் நிலைத்து ஆடவில்லை. ஆனாலும், மறுமுனையில் கேன் வில்லியம்ஸன் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்களைப் பெற்று போட்டியை சமன் செய்தது ஹைதராபாத் அணி.

வில்லியம்ஸன் 8 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்களையும், ஜகதீஸ் சுஹீத் 14 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

டில்லியின் பந்துவீச்சில் ஆவேஸ் கான் 3, அக்ஸர் பட்டேல் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

போட்டி சமநிலையில் முடிவடைந்ததால் சுப்பர் ஓவர் வீசப்பட்டது.

இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. வோர்ணர், வில்லியம்ஸன் இணை களமிறங்கியது.

இருவரும் இணைந்து அந்த ஓவரில் 7 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி சார்பில் தவான், ரிஷப் பந்த் இணை இறங்கியது. ஒரு பௌண்ட்ரியுடன் 8 ஓட்டங்களைப் பெற்ற டில்லி வெற்றி பெற்றது. (ஐ)

# இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட்: சமநிலையில் முடிந்தது!

கண்டி, ஏப். 26

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதிய முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதில், முதல் டெஸ்ட் போட்டி கடந்த 21ஆம் திகதி ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. சாண்டோ 163, ஹகியூ 127, தமீம் இக்பால் 90, லிதொன் டாஸ் 50 முஸ்பிஹூர் ரகீம் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களை குவித்ததால் முதல் இனிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 541 ஓட்டங்களை அந்த அணி குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இலங்கையின் பந்துவீச்சில் விஸ்வ பெர்னாண்டோ 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு திமுத் கருணாரத்ன இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். அவர் 244 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 166, திரிமன்னே 58 ஓட்டங்களை குவிக்க 8 விக்கெட்களை இழந்து 648 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.



பங்களாதேஷ் சார்பில் பந்துவீசிய தஸ்கின் அஹமட் 3, தஜுல் இஸ்லாம் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு தமீம் இக்பால் - சயீப் ஹசன் இணை தொடக்கம் கொடுத்தனர். சயீப் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்த சாண்டோ ஓட்டம் எதையும் பெறாமல் வெளியேறினார்.

அடுத்து வந்த ஹகியூ தமீம் இக்பாலுடன் இணைந்து பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்த, 33 ஓவர்களை சந்தித்த பங்களாதேஷ் 2 விக்கெட் இழப்புக்கு 100 ஓட்டங்களை எடுத்தது.

தமீம் இக்பால் 74 ஓட்டங்களையும், ஹகியூ 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் சுரங்க லக்மால் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-வாராந்த சினிமா தகவல்கள்

**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலந்தானா்-பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர்- மருத்துவர் இளஞ்செழியபல்லவன்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ் தான தேர்த்திருவிழா 2021 நேரலை

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org